149

ஜகன் மோகினி

ஆகஸ்ட்
1955

JAGAN MOHINI

ESTD. 1923

அல
நான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - OCT 1955
MADRAS

முன்னுரை

ஸ்ரீ வை. மு. ஸ்ரீநிவாஸன் வெளியிட்டுள்ள "ஜயந்தி சிந்தனைகள்" என்ற அவதாரதின சிந்தனை நூல், பல அம்சங்களிலும் தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. ஒவ்வொரு ஹிந்துக் குடும்பத்திலும், முக்கியமாக வைஷ்ணவர்களிடையேயும், மிகவும் பக்தி ச்ரத்தையுடன் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீராமன், ஸ்ரீ ஸ்ரீநிவாஸன், ஸ்ரீ மஹாலக்ஷ்மி என்ற நித்யமான பர தத்துவங்களைக் குறித்து நான்கு வியாசங்கள் எழுதியிருக்கிறார். இவை பொருட்சுவை நிறைந்து, கருத்து மிகுந்து, ரஸிக்கத்தக்கவையா யிருக்கின்றன.

ஆசிரியர் வழக்கறிஞராயிருப்பதனால், தகுந்த ஆதாரங்களையும் மேற்கோள்களையும் காட்டத் தவறவில்லை; அவதார மகிமைகளையும் சாதனைகளையும் குறித்து ஆழ்வார்களுடைய அருளிச் செயலிலிருந்தும், ப்ரஸித்த அறிஞர்களின் நூல்களிலிருந்தும் கருத்துக்களும் குறிப்புக்களும் கொடுத்திருக்கிறார். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய இலக்கியங்களில் ஆசிரியருக்குள்ள பரந்த ஞானமும், அவரது பக்தி ச்ரத்தையும் இந்நூலில் நன்கு வெளிப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலுமுள்ள ஓவியங்கள் வாசகர்களுக்கு, முக்கியமாக பாமரருக்கு, மிகவும் கவர்ச்சிகரமாயிருக்கும்; ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார விசேஷங்களில் பல முக்கிய ஸாதனைகளையும் படிப்பினைகளையும் சித்திரமூலமாக இப்பகுதியில் காணலாம்.

நல்ல அமைப்பு, எளிய தூய தமிழ் நடை, பெரியோர் பொன்மொழிகளின் ஆதாரம், கருத்து நிறைந்த ஓவியங்களின் அணியழகு,—இவை யனைத்தும் சேர்ந்துள்ள இப்புத்தகம் ஒவ்வொரு பக்தனுக்கும் மதிப்புக்குரியதாக விருக்கும்; ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய தத்துவங்களின் மேன்மையையும் ஆழ்பொருளையும் அறிய இந்நூல் பெரிதும் பயன்படும்.

பக்தி ச்ரத்தை மிகுந்த உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, ஒரு உண்மை பக்தனாகவுமுள்ள இவ்வாசிரியர், ஏற்கெனவே தாம் இயற்றிவரும் அருமையான ஹிந்து மதப் பிரசாரத்தொண்டை, இந்தப் பிரசுரத்தின் மூலமாக மேலும் சிறப்பித்துள்ளார்.

"வேங்கட பாக்"
சென்னை—2.
25—7—55.

W. S. கிருஷ்ணஸ்வாமி நாயுடு.
(கனம் நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்).

பகவத்விஷய ரஸாநுபவம்

காஞ்சீ மஹா வித்வான் ஸ்ரீ. உ. வே. ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

[ஸம்ஸாரிகளின் துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாத ஆழ்வார் அவர்களை நோக்கி உபதேசங்கள் செய்யுமதான இரண்டாம் பதிகத்தில் ஒன்பது பாசுரங்கள் கீழே விவரிக்கப்பட்டன: இனி பத்தாம் பாசுரம் விவரிக்கப் படுகிறது.]

பத்தாம் பாட்டு.

10. எண் பெருக்கந் நலத்து ஒண்பொருளீறில
வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே.

கீழே ஒன்பது பாசுரங்களினால் நடந்த உபதேசங்களைக் கேட்ட ஸம்ஸாரிகள் ஆழ்வாரை நோக்கி 'ஸ்வாமிந்! தேவரீர் உபதேசிக்கிறபடியே செய்வோம்; எம்பெருமானைப் பஜிப்போம்; பஜனத்திற்குப் பாங்காக ஒரு மந்த்ரம் வேணுமே; அது என்ன மந்த்ரம்! அதையும் தேவரீரே நியமித்தருளினால் நன்றாம்' என்று விஜ்ஞாபனம் செய்ய, மந்த்ரம் இன்னதென்று அவர்களுக்குத் தெரிவிக்கிறார் இப்பாட்டினால். நாராயணத் திருநாமத்தின் பொருளை அநுஸந்தானம் செய்து கொண்டே அத்திருநாமத்தை வெளியிட்டருளுகிறார் இதில். நாலெழுத்தான நாராயண நாமத்தைச் சொல்வதில் யார்க்கும் சிரமமிராது; அதையும் சிரமமாக நினைப்பார் சிலர் இருக்கக்கூடுமென்று கருதிய ஆழ்வார் இன்னமும் சிறிது ஸௌகரியப்படுத்திக் கொடுப்போமென்று திருவுள்ளம்பற்றி 'நாராயணன்' என்பதை 'நாரணன்' என்று தொகுத்து வெளியிடுகின்றார். நாரணன் என்று சிதைவாகச் சொன்னாலுங்கூட நாராயண நாமத்தையே பூர்த்தியாகச் சொன்னதாய் எம்பெருமான்கொண்டு திருவுள்ளமிரங்குவனென்க. வடமொழியாளர்கள் தமது நூல்களில் எங்கும் நாராயணனென்றே சொல்லி வைத்தார்களே யல்லது நாரணனென்று ஓரிடத்திலும் சொல்லி வைத்திலர். தென்மொழியிலக்கணமே நாரணனென்னுந் தொகுத்தலுக்கு இடம் தந்தது. நாராயணனென்ற சொல்லில் காணத்தக்க பொருள்களெல்லாம் நாரணனென்னுஞ் சொல்லிலும் குறையறக் காணலாகும்.

இங்கே நாரணனென்றதிருநாமம்மட்டுமிருந்தாலும், நாராயண நாமத்தையுட்கொண்ட அஷ்டாக்ஷர மஹாமந்த்ரமே இங்கு உத்தேச்யமானதென்று பூருவாசாரியர்கள் காட்டியுள்ளார்கள். கூரத்தாழ்வானுடைய இதிகாசமொன்று ஈடுமுப்பத்தாறுயிரப்படியில் காட்டப்பட்டுள்ளது. (அதாவது) கூரத்தாழ்வானுக்கு இரண்டு திருக்குமாரர்கள் ஸ்ரீரங்கநாதனுடைய திருவருளால்

அவதரிக்க, ஆழ்வான் அக்குமாரர்கட்கு நாமகரணம் முதலியன செய்வித்தற்கு ஸ்ரீராமாநுஜரே கடவரென்று எண்ணித் தாம் ஒன்றும் செய்யாதிருக்க, இக்குமாரர்களின் திருவவதாரத்தைப் பற்றிப் பெருமகிழ்ச்சி கொண்டிருந்த ஸ்ரீராமாநுஜர் பதினோரா நாளிலே சிஷ்யவர்க்கத்துடன் ஆழ்வானுடைய திருமாளிகைக் கெழுந்தருளித் தமது பிரதான சீடர்களில் ஒருவரான எம்பாரென்னும் பெரியாரை நோக்கிக் 'குழந்தைகளை எடுத்துக்கொண்டு வாரும்' என்ன, அவர் அங்ஙனமே உள்ளே சென்று ப்ரபந்த குலக்கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்து வரும்போது த்ருஷ்டி தோஷம் [கண்ணெச்சில்] முதலியன தாங்காதபடி ரக்ஷையாக த்வயமென்னும் சிறந்த மந்த்ரத்தை மனுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை ஸ்ரீராமாநுஜர்க்குக் காட்டினர்.

அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத் தெய்விக சிசுக்களின் தேஜோ விசேஷத்தைக் கண்டு வியப்புக் கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயமந்த்ரம் பரிமளிக் கின்றதே, இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநுஸந்தானம் செய்து கொண்டு வந்தேன்' என்று சொல்ல, ஸ்ரீராமாநுஜர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு மிகவுகந்து அவரைப் பார்த்து 'இக் குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய்தற்கு நீரே முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்' என்று நியமித்து விட்டார்.

இஃது இங்ஙனமிருக்க, இக்குமாரரிருவர்க்கும் திருத் தந்தையாரான கூரத்தாழ்வான் திருவாய்மொழிப் பொருள் சொல்லி வரும்போது * எண்பெருக்கந் நலத்து என்கிற இந்தப் பாசுரம் வந்தவளவிலே, 'இது திருவெட்டெழுத்தின் பொருளை விவரிக்கிறது; மந்த்ரத்தின் பொருள் தத்தம் ஆசார்யரிடத்தே கேட்டுணரத் தக்கதாதலால் இதனை உங்கள் ஆசாரியரிடத்தே சென்று கேட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்லி ப்ரவசனத்தை நிறுத்திவிட, அதனை விரைவில் உணர்ந்து கொள்ளவேணு மென்னும் அவாவினால் அவ்விருவரும் உடனே எழுந்து தங்கள் ஆசார்யரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப் புறப்பட்டவளவிலே, ஆழ்வான் யாக்கை நிலையாமையைத் திருவுள்ளத்திற் கொண்டு அவர்களை யழைத்து 'இன்னபோது இன்னாரிருப்பார் இன்னார் போவாரென்று தெரியாது; ஆதலால் இருந்து கேளுங்கள்; என்று திருமந்திரத்தைச் சொல்லி இப் பாட்டின் பொருளையும் விவரித்து, "இப்பாசுரத்தைத் திரு மந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்" என்று பணித் தருளினார்.

ஆகவே திருமந்திரத்தின் பொருளை இப்பாட்டுக்கு இணங்க மனனம் செய்ய வேண்டியிருத்தலால் ஈண்டு அது சுருக்கமாக அறிவிக்கப்படுகின்றது.

1831/95

விஷ்ணு மந்த்ரம், வாஸுதேவ மந்த்ரம், நாராயண மந்த்ரம் என மூன்று மந்த்ரங்களே பகவானுடைய மற்றெல்லா மந்த்ரங்களிற் காட்டிலும் சிறந்தவை. இம்மூன்றினுள்ளும் நாராயண மந்த்ரமே மிகச் சிறந்தது. விஷ்ணு மந்த்ரமானது ஆறெழுத்துடையதாகும். வாஸுதேவ மந்த்ரமானது பன்னிரண்டெழுத்துடையதாகும்.

நாராயண மந்த்ரமானது எட்டெழுத்துடையதாகும். இதனையே அஷ்டாக்ஷரமஹாமந்த்ர மென்பர். இதன் பெருமையையே ஆழ்வார்கள் "எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே" என்பது முதலான பலபல பாசுரங்களினால் வெளியிட்டுள்ளார்கள். இந்த மந்த்ரத்தில் முதற்பகுதி (ஓம்) என்னும் ப்ரணவம். அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்றெழுத்துகள் சேர்ந்து (ஓம்) என்று ஓரெழுத்தாயிற்று. ஸகலஜகத்துக்கும் காரணபூதனும் ஸர்வரக்ஷகனுமான எம்பெருமானைச் சொல்லுகிறது அகாரம். எம்பெருமான் ஸ்ரீமஹாலக்ஷ்மியோடு கூடியிருந்தே காத்தல் தொழிலை நடத்தவல்லவனாதலால் இவ்வகாரத்திலே பிராட்டியையும் சேர்த்து அநுஸந்திக்க வேணுமென்பது நூற்கொள்கை. அகாரத்தின் மேல் நான்காம் வேற்றுமை யுருபு ஏறியிருந்து அது வேதத்திற்கு உரிய இலக்கணத்தினால் லோபமடைந்து விட்டது. அதன் பொருள் உரிமைப்பட்டிருத்தல் [சேஷத்வம்] ஆகும். மூன்றாவதான எழுத்தாகிய மகாரத்திற்கு அறிவுள்ளவனான [சேதனனாகிய] ஜீவாத்மா அர்த்தமாதலால் ஜீவாத்ம ராசிகளெல்லாம் பகவானுக்கும் பிராட்டிக்கும் சேஷப்பட்டவை என்றதாயிற்று. இடையில் இருக்கின்ற உகாரத்தின் பொருள் யாதெனில்; வடமொழியில் அவதாரணப் பொருள் எனப்படும். தமிழில் பிரிநிலைப் பொருளெனப்படும். ஸ்ரீமந்நாராயணனொருவனுக்குத் தவிர மற்று எவர்க்கும் சேஷப்பட்டவனல்லன் என்றதாகத் தேறிற்று. உலகில் ஒருவனுக்கு உரியவனானவன் மற்றும் பலர்க்கும் உரிமைப்பட்டிருத்தலை காணாநின்றோம். இங்கு அப்படியல்லாமல் நாராயணனுக்கு சேஷப்பட்டவன் நாராயணனுக்கேயன்றி மற்றொருவற்கும் சேஷப்பட்டவனல்லன் என்றதாயிற்று. இதுதான் உகாரத்தில் தேறினதாயிற்று. ஆக, ப்ரணவத்தினால் எம்பெருமானுக்கே உரிமைப்பட்ட தன்மையும் பிறர்க்கும் தனக்கும் உரிமைப்படாத தன்மையும் சொல்லிற்றாயிற்று.

இனிமேல் (நம:) என்பதும் (நாராயணாய) என்பதும் நிற்கிறது. இவற்றுக்கு மந்த்ர சேஷமென்று பெயர். இதனால் கீழ்ப் பிரணவத்தில் (ஓம் என்றதில்) சொன்ன பொருளே விவரிக்கப்படுகிறது. (நம:) என்பதனால் விரோதி கழிக்கப்படுகிறது, மூன்று வகையான விரோதிகள் அறியத் தக்கதன. ஸ்வரூப விரோதியென்றும் உபாயவிரோதி யென்றும் புருஷார்த்த விரோதியென்றும் விரோதிகள் மூவகைப்படும். அஹங்காரமமகாரங்களோடு கூடியிருக்கும் நிலை ஸ்வரூபவிரோதி யெனப்படும். அந்த நிலையை ஆழ்வார் "யானேயென்னை யறியகிலாதே யானே யென்றனதே யென்றிருந்தேன்" என்ற பாசுரத்தினால் அது

ஸந்தித்துக் காட்டினர். இந்த விரோதி கழிந்த நிலையை "யானே நீ என்னுடைமையும் நீயே" என்ற பாசுரத்தினுல் காட்டினர்.

இனி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தான் முயற்சி செய்கை உபாய விரோதியெனப்படும். அது கழிந்த நிலையை ஆழ்வார் "களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்" என்ற பாசுரத்தினுல் காட்டினர். நமது துன்பத்தை எம்பெருமான் தீர்த்தாலும் தீர்க்காவிட்டாலும் ஒருவிதமான முயற்சியையும் செய்யகில்லோம் என்றிருக்கையே உபாயவிரோதி கழிந்த நிலையாகும். இனி புருஷார்த்த விரோதியாவது, பலனை யனுபவிக்கும்போது அதனுல் தான் ஆனந்தப் படுகை. அது இவனுக்குத் தகாது. அந்த ஆனந்தம் எம்பெருமானுடையதே யென்று கொண்டிருக்கை புருஷார்த்தவிரோதி கழிந்த நிலையாகும். ஆக இம்மூன்று விரோதிகளின் கழிவும் (நம:) என்னுமதில் தெரிவிக்கப்படும். (தொடரும்)

"தென்னிந்திய கல்யாண முறைகள்"

டி தலைப்பில் சென்னை ரேடியோவிலிருந்து சென்ற ஐந்து வெள்ளிக்கிழமைகளில் வை. மு. கோ. ஒலிபரப்பிய இசை விளக்கத்தைக்கேட்டு,பல அன்பர்கள் பாராட்டி, நமக்கும் ரேடியோ நிலையத்துக்கும் எழுதியிருக்கிருர்கள். "இவ்வளவு ஆழ்ந்த தத்துவங்கள் பொதிந்திருக்கும் நமது ஸம்ப்ரதாயச் சிறப்புகளைத் தாங்கள் அவசியம் புத்தகமூலம் வெளியிட்டு அனைவரும் உணரும் படிப் பேருபகாரம் செய்யவேண்டும்" என்ற கோரிக்கையையும் பலர் தெரிவித்துள்ளனர். இதை நிறைவேற்றுவது எமது கடமையேயாகும்; பெருமகிழ்ச்சியுடன் வெளியிடுவோம். ரேடியோ நிகழ்ச்சியில் அவகாசக் குறைவால் விடுபட்டுப்போன பாடல் களையும் சேர்த்து வெளியிடுவோம். அனைவருக்கும் எமது நன்றியையும் வந்தனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியை

பொருட் காட்சி வைபவம்

திருவல்லிக்கேணியில் வருடந்தோறும் சிறப்புடன் நடை பெற்று வரும் மஹாத்மாஜி ஸேவா சங்கப் பொருட்காட்சி இவ் வருடம் நாளது 12உ வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு வஸந்த பங்களாவில் நடைபெறும். கலாக்ஷேத்திரத் தலைவி ஸ்ரீமதி ருக்மிணி தேவி தலைமை வகித்து, பொருட்காட்சியைத் திறந்து வைப்பார். அவ்வமயம் ஹிந்தி, ஈ. எஸ். எல். ஸி. பரீக்ஷைகளில் தேறிய சங்க மாணவிகளுக்கு யோக்யதா பத்திரங்கள் வழங்கப் படும். பொருட்காட்சியில் வழக்கம்போல் அங்கத்தினர்களும் அபி மானிகளும் கலைச்சுவையுடன் செய்துள்ள பல உயர்தர கை வேலைப் பொருள்கள் வைக்கப்படும். அனைவரும் விஜயம் செய்க!

❋

வை. மு. பத்மினி ஸ்ரீனிவாஸன் சிறுகதை. (தொடர்ச்சி)

மனமாற்றம்

வருஷங்கள் ஒன்று, இரண்டு என்று ஓடினவே தவிர சீதாவின் உடல் நிலையில் ஒருவித மாறுதலும் ஏற்படவில்லை. தன் மனைவியைத் தன் கண்களுக்குச் சமமாய் நினைத்த கோபாலனின் மனமும் சலிக்கத் தொடங்கியது. நாள் தவறாது சீதாவிடம் இழுத்துச் செல்லும் கால்கள் தினமும் போக மறுத்தது. பெண் பித்துப் பிடித்த அவன் உள்ளம் கட்டுக்கடங்காது துள்ளியது! தன் மகனின் நிலைமை அறிந்த தாயார் அவன் துடிதுடிப்பை இன்னும் கிளறுவதுபோல் மறுகல்யாணம் செய்யும் ஆசையைத் தூண்டிவிட்டாள். வெறி தலைக்கேறிய கோபாலன் அல்ப ஆசையைப் பூர்த்தி செய்யத்தான் முதல் மனைவிக்குச் செய்யும் மகத்தான த்ரோகத்தையும் நினைத்துப் பாராது மறுபேச்சின்றி ஒப்புக்கொண்டான். மனைவியை இழக்கத் துணிந்த மனம் குழந்தையை இழக்கத் துணியவில்லை! 'குழந்தை உன்பக்கலில் இருந்தால் அதற்கும் இந்த வ்யாதி தொத்திக்கொள்ளும்' என்று சாக்குச் சொல்லி, லக்ஷ்மியைத் தாயிடமிருந்து பிரித்து எடுத்து வந்துவிட்டான்.

உண்ண உணவு இன்றி, பெண்களை மட்டும் பெற்று வளர்த்து விவாகம் செய்ய விதியின்றித் தவிக்கும் தாய்மார்கள் உலகில் எவ்வளவு பேர் இல்லை? அந்தக் கோஷ்டியில் சேர்ந்த ஒரு மகானுபாவர் கிளியைப்போல் வளர்ந்து இருக்கும் தன் பெண் ஜானகியைப் பெண்ணுக்குமேல் பெண்ணாய் கோபாலனின் கரத்தில் ஒப்புவித்தார். அவன் முதல் மனைவியை அறவே மறந்து புது இல்வாழ்க்கையை ஆனந்தமாய்த் தொடங்கினான்.

புண்பட்ட உள்ளத்தில் கோலைவிட்டுக் கிளறினால் என்ன பாடுபடாது! ஏற்கெனவே நோயால் தவிக்கும் ஸீதாவுக்கு இந்தச் செய்தி கேட்டு உடல் நிலை இன்னும் மோசமாகத் தொடங்கியது. மனோவேதனையின் முன்பு மருந்தும் உடலில் ஒட்டாது வ்யர்த்தமாகியது. சீதாவுக்குத் தன் கணவன் பேரில்கூட அவ்வளவு கோபம் ஏற்படவில்லை. பால்ய வயதில் மனதைக் கட்டுப்படுத்த சக்தி அற்றவருக்கு மனைவி வருஷக்கணக்கில் படுக்கையில் இருந்தால் துன்பம்தானே! அந்த மோக வெறியைத் தணிக்க அவர் செய்துகொண்டதுகூட தப்பாய்ப்படவில்லை. மாமியார் பிள்ளைக்கு நல்ல புத்தி சொல்வதுபோக, "ஊம்!...இனி அவள் ஏதுடா தேறுவது? நீ எத்தனை நாள் ஒண்டிக்கட்டையாய்க் கிடப்பது?" என்று மகனையும் தூண்டி, நோயுடன் இருக்கும் தன்னிடம் ஹிதமாய் இரண்டுவார்த்தை சொல்லாவிட்டாலும் சுடுசரம்பல்போல், "ஊம்!...இந்த வ்யாதி வந்தால் தேறி சொஸ்தமாவது ஏது? நீ காலம் பூராவும் படுக்கையோடு இருந்து போக வேண்டியதுதான். அதற்காக என் மகன் "கல்யாணம் பண்ணியும் ப்ரம்மசாரி" என்று வாழ முடியுமா என்ன? என்று தூக்கி எறிந்து பேசியதுதான் உள்ளத்தை ரணகளமாக்கியது. அதுவும் போதாது குழந்தையையும் வேறு பிரித்து எடுத்துச் சென்றது இன்னும் அதிகமாய்ப் பாதித்தது.

"என்ன உலகம்! கணவனுக்கு இதே வ்யாதி வந்தால் மனைவி தன் உயிரையே மடுத்துப் பணிவிடை செய்யவேண்டும். அதே

வ்யாதி மனைவிக்கு என்றால் அவளைப்பற்றிச் சிந்தனைகூட இல்லாது புதுமணம் செய்துகொண்டு கொம்மாளமடிப்பது! ஒரு மனைவி இருக்கும்போது மறுமணம் செய்துகொள்ளக்கூடாது......என்று சட்டம் அமுலுக்கு வந்த காலத்தில்கூட துணிந்துவிட்டார்களே. நான அவர்கள்மேல் வழக்கு எடுக்க மாட்டேன என்ற துணிவு தானே! போகட்டும்; நான் அபாக்யவதி. இரண்டாவது வந்தவளாவது க்ஷேமமாய் இருக்கட்டும். என்னிடம் சுகப்படாவிட்டாலும் லக்ஷ்மி அவளிடமாவது சுகப்படட்டும்" என்று மனமார வாழ்த்தினாள். அவள் தாய், தந்தை, தம்பி, மாப்பிள்ளைமேல் வழக்கு எடுக்கத் துடித்தார்கள். ஆனால், சீதாவின் வற்புறுத்தலின் பேரில் தங்கள் கோபத்தை அடக்கிக்கொண்டார்கள்.

காலனே சீதா படும் துன்பத்தைப் பார்த்துச் சகியாதவன் போல் சில தினங்களிலேயே தன்னிடம் அழைத்துக்கொண்டான். கடைசி முறைகூட குழந்தையின் முகத்தில் விழிக்காமல் குறையுடனேயே கண்ணை மூடினாள்.

வருடங்கள் ஓடி மறைந்தன. தாயில்லாக் குழந்தையான லக்ஷ்மியை அவள் சித்தி தன் குழந்தைக்கு மேலாய்ப் போற்றி வளர்த்தாள். பத்து வயதுக்குமேல் ஆனபிறகுதான் தன் தாயின் விவரம் பூராவும் அறிந்தாள். அவள் இளம் உள்ளம் தாயின் நிலையை நினைத்துத் துடித்தது. தன தகப்பனார் இவ்வளவு கொடியவரா?...என்று நினைத்துப் பார்த்தாள்; அவரைப் பார்க்கவும் வெறுத்தாள். தன் தாயைச் சேர்ந்தவர்களைப் பார்க்க ஆவல் தூண்டியது. ஆனால், தகப்பனார்தான் அவர்களுக்கு விரோதி ஆயிற்றே...எப்படிப் பார்ப்பது?... அதே ஏக்கம் அவள் நெஞ்சை அழுத்திக்கொண்டு இருந்தது.

ஒரு சமயம் கடை வீதியில் போய்க்கொண்டு இருந்தார்கள். லக்ஷ்மியின் மாமா எதிரே வந்துகொண்டு இருந்தார். அவள் சித்தி, "லக்ஷ்மி! அதோ பார்! அவர்தான் உன் மாமா" என்று காண்பித்தாள். உற்றுப் பார்த்த லக்ஷ்மியை அவரும் கவனிக்காமல் இல்லை. வீடு வந்ததுதான் தாமதம்...அவள் தகப்பனார் கண்களில் தீப்பொறி பறக்க, லக்ஷ்மி, ஜானகி இருவரையும அழைத்து, "ஊம்! இவ்வளவு துணிந்துவிட்டீர்களா? உறவுமுறை காட்டி அவள் ஆசையைத் தூண்டுகிறாயா? நான் இருக்கும்வரை அந்த நாய்கள் இங்கு காலை வைக்க முடியாது. அதை நினைவில் வைத்துக்கொள்" என்று இருவருக்கும் வசைமாரிகளைப் பொழிந்தார். பொறுமையாய்க் கேட்டுக்கொண்டு இருந்த லக்ஷ்மியின் மனது கோபத்தால் பொங்கி எழுந்தது. தன்னையும் மீறி, "அப்பா!...வீணாய்ப் பேசாதீர்கள். இன்று சேராவிட்டாலும் ஒரு காலத்தில் உறவு விடாது. ஒட்டத்தான் ஒட்டும. நாய்களாம்!... ஏன் என்றால், நோயுடன் தவிக்கும் மனைவிக்கு ஆறுதல் சொல்வது போகப் பெண்ணுக்குமேல் பெண்ணாய் மணம் செய்துகொண்டதைக் கோர்ட்டுக்கு இழுத்துப் பங்கம் செய்யாது கணவன் மனைவி என்ற கடமையில் பேசாது இருந்தாளே என் தாய்; அதனால் அவர்கள் நாய்களாய் விட்டார்களா? கோர்ட்டில் இழுத்து காராக்ரஹத்தில் உட்கார வைத்து இருந்தால் அப்போது தெரிந்து இருக்கும் அந்த நாய்களின் வெறி எவ்வளவு

தூரம்!" என்று என்றும் இல்லாது ஆவேசம் வந்தவளைப் போல் இரைந்துவிட்டுக் கண்ணீர் பெருக அந்த இடத்தைவிட்டு அகன்றாள். பெண்ணை எதிர்த்துப் பேசவும் வாய் இன்றி மௌனமானார். இவ்வளவு துணிச்சலுடன் லக்ஷ்மி தன் தந்தைக்கு ஒரு சவுக்கடி கொடுத்ததை எண்ணி ஜானகி த்ருப்தி அடைந்தாள்.

தாயின் மறுபிறவிபோல் லக்ஷ்மி குட்டி சீதாவாக விளங்கியதைப் பார்த்து வீட்டிலேயே எல்லோரும் ப்ரமித்தார்கள். லக்ஷ்மியின் அழகைக் கண்டேதான் அவள் புக்ககத்தார் சீர் சிறப்பு குறைவாய் இருந்தாலும் கல்யாணம் செய்துகொள்ள முன்வந்தார்கள். எல்லாம் த்ருபதியாய் இருந்தாலும் தன் தாய் வீட்டார் வரவில்லையே என்ற கவலைக் கடல் அலைகள்போல் பலவித எண்ணங்களைத் தோற்றி மனத்தை வாட்டியது!

"லக்ஷ்மீ!...லக்ஷ்மீ!... இங்கே ஓடிவா!... உன் மாமா, மாமி பாட்டி, தாத்தா எல்லோரும் வருகிறார்கள். வா!...வா!" என்று பரபரப்பு மிகுந்த குரலில் கத்தியவாறு ஜானகி ஓடிவந்தாள். லக்ஷ்மியின் காதுகளால் அதை நம்பவே முடியவில்லை. உண்மையாகவா?...சித்தீ! நிஜமாகவா? என்று ப்ரமிப்போடு ஓடிவந்தாள் அதற்குள் அவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் கூடத்திற்கு வந்தார்கள்.

தன் அருமை சீதாவே மறுஜென்மம் எடுத்து வருவதைப் போல் ஆவலுடன் ஓடிவரும் லக்ஷ்மியைக் கண்ட அவள் பாட்டி ப்ரமித்து, இவ்வளவு நாளாய் மனதில் தேக்கிவைத்து இருந்த துக்கம், ஆவல், அன்பு அவ்வளவையும் கொட்டி, பேத்தியை ஆநந்தக் கண்ணீர் பெருகச் சேர்த்து அணைத்துக்கொண்டு, ஆநந்தம் தொண்டையை அடைக்க, தன் நிலைமையே மறந்தாள். லக்ஷ்மிக்குச் சந்தோஷத்தில் பேசவே தெரியாது பாட்டியைத் தழுவியவாறு கண்ணீர் பெருக நின்றாள். இதை அறிந்து எல்லோரும் ப்ரமிப்புடன் அங்கு கண்காட்சி பார்ப்பதுபோல் சேர்ந்துவிட்டார்கள். இந்தக் காட்சி எல்லோர் உள்ளத்தையும் கலக்கி சுபமான கல்யாண வீடு என்பதையும் மறக்கச்செய்து கண்ணீர் பெருக வைத்தது! அங்கு இருந்த எல்லோரும் சீதாவை நினைத்துத் தங்கள் அனுதாபத்தைக் கண்ணீர் மூலமாய்த் தெரிவித்தார்கள்.

இவ்வளவு நேரம் ப்ரமை பிடித்தாப்போல் நின்று இருந்த லக்ஷ்மியின் தந்தை என்றும் இல்லாது மகளை அணைத்துக் கொண்டு, கண்ணீர் பெருக "கண்மணீ!...உன் குணத்தழகை அறியாது நான் மிருகமாகவே இருந்தேன்!...நல்ல சமயத்தில் என் கண்ணைத் திறந்துவைத்தாய். நேற்று நீயும், சித்தியும் என்னிடம் சண்டை போடாது இருந்தால் நான் கேவலம் உதவாக்கரையாகவே போயிருப்பேன். உங்கள் கோபத்தின் ஜ்வாலை என் உள்ளத்தில் தோன்றும் க்ரூர ஜ்வாலையை அழித்து பகவானின் முன்பு எரியும் துல்யமான ஜோதியாகச் செய்துவிட்டது! அது மட்டும் இப்பொழுதாவது பகவான் எனக்கு புத்திகொடுத்தாரே என்றுதான் நான் சந்தோஷப்படுகிறேன்" என்று புலம்பினார்.

லக்ஷ்மி திகைப்புடன், "அப்பா!... நிஜமாகவே நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?... உங்கள் மனதுகூடவா இவ்வளவு மாறு

பட்டுவிட்டது?'' என்று ஆர்வம் பொங்க அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

"ஆம், லக்ஷ்மீ! நான் மனிதனுய்விட்டேன்! நேற்று உன் சித்தி என்னிடம் அவர்களை அழைக்கத்தான்வேண்டும் என்று சண்டைபோட்டாள்; கரா கண்டிதமாய் முடியாது என்று சொல்லி ஆத்திரமாய் வெளியே போனேன்..."டேய் மூடா! கேவலம் மிருகமாகாதே! உன் கடமையை நினைவுபடுத்திக் கொள். உன் மூத்த மனைவி உயிருடன் இருக்கும்போதுதான் அவளை திருப்தி படுத்தாது துக்க சாகரத்தில் ஆழ்த்தி சாகவே அடித்தாய்!...இப்போது அவள் குழந்தையையும் வதைக்காதே!...அவள் ஆத்மாவைமாவது சாந்தப்படுத்து!...போ! இப்போதேபோய் அவர்கள் காலில் விழுந்து கூப்பிடு; ஊம்! நட! நட!" என்று யாரோ சொல்வதுபோல பிரமை தோன்றியது. அதை ஊர்ஜிதப்படுத்துவதுபோல், "வணக்கம்தான் மனிதனுக்கு அழகு என்பதை நினைவுறுத்தி வாசல் படார்! என்று மண்டையில் ஓங்கி ஒரு இடிஇடித்தது! தலையை இரு கைகளாலேயும் பிடித்துக்கொண்டு பெஞ்சியில் அப்படியே படுத்துவிட்டேன். என் மாறுதலை என்னுலேயே நம்பமுடியவில்லை. லக்ஷ்மீ! ஆவேசம் வந்தவனைப்போல் அவர்கள் வீட்டைநோக்கி ஓடி என் தப்பை மன்னிக்கும்படி வேண்டிக் கல்யாணத்தைச் சிறப்பிக்குமாறு வேண்டினேன். அவர்கள் தங்கமான குணத்தை அறியாது நான் கேவலமாய் நடந்ததை இப்போதுதான் நான் உணர்கிறேன்! என்று மூச்சுவிடாது சொல்லி முடித்தார். லக்ஷ்மியின உள்ளம் சந்தோஷத்தால் நிரம்பிப் பூரித்தது.

இதற்குள் லக்ஷ்மியின் மாமா, தாங்கள் லக்ஷ்மிக்காகக்கொண்டு வந்த வெள்ளி, பித்தளைப் பாத்திரங்கள், நகைகள் எல்லாம் கூடத்தில் அழகாய் எடுத்துவைத்தார். இதைப் பார்த்து எல்லோரும் ஒன்றும்புரியாது விழித்தார்கள். லக்ஷ்மியின் பாட்டி, "அம்மா! லக்ஷ்மீ! உன்னைக் கைப்பிடிக்கப்போகிறவன் யாருமே இல்லை; என் தம்பி பிள்ளைதான். உன்னை என் அருகில் அழைத்துக்கொள்ள, நான் கேட்டால் காரியம் ஆகாது என்று அவர்களையே வலுவில் உன் அழகைக்கண்டு செய்துகொள்வதாய்ச் சொல்லி ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்; சீர்கள் பூராவும் நான் செய்கிறேன். அவர்கள் சக்திக்கு அவர்கள் செய்யட்டும் என்று நான்தான் இடத்தை ஏற்பாடுசெய்தேன். ஆனல், உன் தந்தையின் மனம் இப்படி மாறுபட்டு நாமும் கல்யாணத்தில் கலந்துகொள்ளப்போகிறோம் என்று நினைவிக்கவில்லை. எல்லாம் பகவானின் திருவுள்ளம்தான்; எங்காவது உன் தாயின் ஆயுளையும் போட்டுக்கொண்டு நீங்கள் தீர்க்க ஆயுஸாக இருந்தால் போதும்" என்று கண்களை நீர்த்துளி மறைக்கத் தொண்டையை அடைத்தவாறு சொன்னுள்.

இந்தப் புதுமையான விஷயத்தைக்கேட்ட எல்லோர் உள்ளத்திலும் ஆர்வம் எழுந்தது. அவர்களின் தங்கமான குணத்தை எல்லோர வாய்களும் தாளுக வாழ்த்தியது; அழகு பிம்பமான லக்ஷ்மியின் முகத்தில சோககளை மாறி திருப்தி பாவி இன்னும் அவள் அழகைப பனமடங்காக்கியது!

காளிதாசர் கனவு

8, உமாப்ரஸாதம்— குமாரஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

பார்வதியின் தவம்

பரமேச்வரன் தவஞ்செய்வதற்காக வேறு இடம் சென்றதும் பார்வதி தன் அழகைப் பழித்துக்கொண்டாள். காதலனுடைய அன்பைக் கவராத அழகால் பயனென்ன? 'இனித் தவத்தால் தான் அத்தகைய நாயகனையும் அவனுடைய ஒப்பற்ற அன்பையும் அடையலாம் என்று அவள் முடிவு செய்தாள். அவளுடைய தாய் மேனாதேவி "அம்மா நீ வீட்டு தெய்வங்களை வழிபட்டால் போதும்; உன் மிருதுவான தேகம் எங்கே? கடுமையான தவம் எங்கே?" என்று தடுத்தும் பார்வதி தவத்திற்காகப் புறப்பட்டுக் காட்டுக்குச் சென்றாள். அங்கே இமயத்தில் கௌரீசிகரம் என்ற மலையில் பரமேச்வரனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தாள். மார்பில் பூண்டிருந்த ஹாரங்களைக் கழட்டி வைத்தாள். சந்தனப்பூச்சை நிறுத்தினாள். வெண் பட்டாடையைக் களைந்து மரவுரியை உடுத்தாள். ஒட்டியாணத்தைக் கழற்றி தர்ப்பையால் செய்த மௌஞ்சியைத் தரித்தாள். ஜபமாலையைக் கைக்கொண்டாள். மஞ்சத்திலுள்ள பட்டுப் படுக்கையை நீக்கித் தரையிலேயே படுக்கத் தொடங்கினாள். கந்தனை வளர்க்கப்போகிற கைகளால் அவனிடம் உள்ள பிரியத்தைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமான அன்புடன் ஆசிரமச் செடிகளுக்குத் தண்ணீர்விட்டு வளர்த்தாள். அவ்விடத்தில் வெகு காலமாகத் தவஞ்செய்து வந்த முனிவர்கள் கூட அவளுடைய தவத்தைக் கண்டு வியந்தார்கள். அவளைத் தர்சனம் செய்து அவளுடைய தவக்கோலத்தின் சிறப்பை உணர ஆவல் கொண்டார்கள். அற உணர்ச்சியிலேயே ஆழ்ந்து அறப் பழக்கங்களிலேயே ஈடுபட்டிருப்பவர்கள் விஷயத்தில் இளமை முதுமை என்ற பாகுபாடு கிடையாது. தவத்தில் ஆர்வம் இளமையிலும் வரலாம், முதுமையிலும் வராமல் இருக்கலாம். அத்தகைய தவநிலைமை முற்பிறப்புகளில் ஏற்பட்ட புண்ணியத்தாலும் இப்பிறவியில் ஏற்படும் மன உறுதியாலுந்தான் கிடைக்கும். வைகறையில் துயிலெழுந்து பனிகாலத்தில்கூட குளிர்ந்த தண்ணீரில் மூழ்கி மரவுரி பூண்டு அக்கினியில் ஹோமங்களைச்செய்து புண்ணிய நூல்களைப் படித்து இறைவனை வாயார வாழ்த்தி மனதை எப்பொழுதும் ஈசனிடத்திலேயே அர்ப்பணித்திருந்தாள்.

அவள் தவமிருந்த தபோவனம் அமைதியும் பொலிவும் தூய்மையும் நிரம்பியிருந்தது. புலியும் பசுவும் ஒரே துறையில் நீர் அருந்தின. ஒன்றையொன்று துன்புறுத்தும் இயற்கையுள்ள பிராணிகள் எல்லாம் அன்பாகவும் கூட்டுறவாகவும் வாழ்ந்தன.

பல விருக்ஷங்கள் மக்கள் விரும்பிய இனிய பழங்களைக் கொடுத்தன. பஞ்சாக்கினிகள் நடுவில் சூர்யனை இமைக்கொட்டாமல் நோக்கித் தவஞ்செய்தாள். பந்து விளையாட்டாலும் வாட்டமடையும் அவளுடைய திருமேனிக்குக் கடுந்தவம் புரிந்தும் தங்கத் தாமரைப்பூபோல் வாட்டமின்றி விளங்கிற்று. மேகத்திலிருந்து விழும் நீர்த்துளிகளும் சந்திரகிரணங்களும் தவிர அவளுக்கு வேறு உணவே இல்லை. மரத்திலிருந்து தானாகவே உலர்ந்து கீழே விழும் இலைகளைக்கூட அவள் உணவாக உபயோகப்படுத்தாமல் தவமிருந்ததால் அவளுக்கு "அபர்ணா" என்ற பெயர் ஏற்பட்டது. பூர்ணயோக நிலையிலிருந்தபொழுது அவள் யோகாசனத்திலமர்ந்திருந்ததால் உடல் சாய்வின்றி நேராக இருந்து மனோலயத்திற்கு உதவி செய்தது. அப்பொழுது மேகத்திலிருந்து விழுந்த நீர்த்துளிகள் ஒருகணம் அவளுடைய அசைவற்ற உதடுகளில் தங்கி பிறகு அவளுடைய தனங்கள்மீது விழுந்து பிறகு அவளுடைய நாபியை அடைந்தன. பனிக்கட்டிகள் உரைந்து அவளுடைய முகத்தின்மேல் விழுந்தாலும் அந்த முகத்தாமரையின் பொலிவு குன்றவேயில்லை. பனிகாலத்தில் இரவில் உடலை நடுங்கச் செய்யும் குளிர்ந்தநீரில் நின்று தவஞ்செய்த அவளுடைய நிலைமைக்கு மேகங்களில் ஒளிவீசும் மின்னல்கள் அத்தாட்சிகளாக விளங்கின. அவள் நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கண் பார்வையைப் புருவங்களின் நடுவில் வைத்துச் சிவத்தியானத்தில் ஆழ்ந்திருந்தாள்.

(தொடரும்)

*

சுதந்திரத் திருநாள்

W. ராமஸ்வாமி (செண்பகச்செல்வன்)

கோல வெண்சங்கே முழங்கு—இன்ப
சுதந்திர தினமதை வாழ்த்தி விளங்கு.
ஞாலத்திலே நல்ல நாடு—இந்திய
நாடென்றே பாடு தமிழ் சிந்தையோடு.
அடிமை என்றெவருமில்லை—இங்கு
அதிகாரத்தால் நம்மை ஆள்வோருமில்லை.
மடமையின்றி நாளும்—நாட்டை
வாழ்த்தி வளம் பெறக் காப்போம்மென்மேலும்.
சத்தியமே காந்தி சக்கரம்—நேரு
சத்குணமே வீர வேலுடன் வாளாம்
பாரதி பாட்டே விற்கணையாம்—பகை
வேரறுக்கும் இவை நாடாளும் துணையாம்.

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

இந்த விஷயத்தை எழுதுவதென்றால் என் கைகள் கூசுகின்றன. நெஞ்சம் பதபதவென்று அடித்துக்கொள்கிறது. இருப்பினும் நான் துணிந்து இதை எழுதுகிறேன். ஏனெனில் என்னைப் போல் அனுபவித்துப் பட்டுத்தேறி மனது அளிந்த புண்ணாகியவர்கள்தான் மற்றவர்களுக்குச் சொல்வதில் நன்மை உண்டாகும் என்கிற ஒரு ஆசையால் இதை எழுதுகிறேன். என் குடும்பம் மிகப்பெரியது. பிறந்த வீட்டில் நான் ஒரே ஒரு செல்வியாய் செல்லப் பெண்ணாய் வளர்ந்து விட்டேன். புக்ககத்தில் காலை வைத்ததும் வசவசவென்று 50 பேர்கள் ஜனங்கள் இருப்பதைப் பார்த்ததுமே எனக்கு மிக்க வெறுப்பாயிருந்தது. என் கணவர் படிப்பில் மிகவும் கெட்டிக்காரர். தங்கப்பதக்கங்கள் பல பரிசுகள் வாங்கியிருப்பதால் அந்த ஆசைக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார்கள்.

பதக்கம் வாங்கும் பெருமையில் மேலும் பல பட்டங்கள் பெறுவதற்காக என் கணவர் லண்டனுக்கும் அமெரிக்காவுக்குமாப் போய்க்கொண்டே இருந்தார். எனக்கு அந்தக் கூட்டத்தில் இருக்கப் பிடிக்காமல் என் பிறந்தகத்திலேயே இருந்துவிட்டேன். மாமியார் வீட்டுத் தொடர்பே அதிகமில்லாத முறையில் என்னுடைய திமிரும் பணமும் ஒன்றுகூடி செய்துவிட்டதால் என்னை எல்லோரும் வெறுக்கவும் என் கணவரும் வெறுக்கும்படியாகவும் செய்துவிட்டார்கள். இந்தக் கொடுமை எனக்குத் தெரியாது. என்மேல் உண்மையான ப்ரியமிருந்தால் என்னைத் தேடிக்கொண்டு என் கணவர் என் வீட்டிற்கு வரட்டும் என்று கர்வத்தோடு நான் படித்துக்கொண்டுமிருந்து B. A. பாஸ் செய்துவிட்டேன். என் பிதா பெரிய பணக்காரர் ஆதலால் மேல் நாடுகளைச் சுற்றிப் பார்க்க ப்ரயாணம் கிளம்பினார். நான் என் கணவரிடமும் புக்ககத்தாரிடமும் கேட்காமல் தகப்பனாருடன் கிளம்பி விட்டேன். எனக்கு இங்கிலீஷ் நன்றாகத்தெரியும் என்கிற கர்வத்துடன் கிளம்பினேன். என் தகப்பனார் ஒரு பெரிய வர்த்தக நிபுணர். அவரும் நானும் மட்டும் சென்றோம். அவருடைய ப்ரைவேட் ஸெக்ரெட்டரியும் கூட வந்தார். நாங்கள் மேல்நாடு பூராவும் சுற்றிக்கொண்டு வருவதற்கு ஒரு வருஷ காலமாகி விட்டது. நான் ஊர் ஊராய்ச் சுற்றுவதும், அங்குள்ள விசித்திரங்களைப் பார்ப்பதும், தகப்பனாருடன் வியாபார விஷயமாய்ப் போகும் இடத்திற்கெல்லாம் போவதும், ஒரு ஆண் பிள்ளையைப்போல் பழகினேனேயன்றி பாரத நாட்டில் பிறந்த ஒரு பெண் என்பதையும் மறந்தேன். எனக்குக் கல்யாணமாகி இருக்கிறது. நான் ஒருவருடைய பொருள் என்பதையும் அறவே மறந்துவிட்டேன். ஒரு வருஷம் கழித்து பாரத நாட்டிற்குத் திரும்பி வந்தேன். அப்போதும் எனக்கு என் புக்ககத்தைப் பற்றிய எண்ணமே இல்லை.

நான் இந்தியா வந்தபிறகு என்னை என் சிநேகிதைகள் பார்க்க வந்தார்கள். நான் கணவனை மதியாமல் அப்பாவுடன் துணிந்து சீமைக்குச் சென்றுவிட்டதுடன் அப்பாவின் காரியதரிசியுடன் நான் தீயவழியில் புகுந்துவிட்டதாக ஒருவதந்தி இங்கு ஊர்பூராவும்

பரவி விட்டதாயும், என் கணவர் தனக்குப் பிடித்த பெண்ணை மணந்துகொண்டு விட்டதாயும் தம்பதிகள் மிகமிக அன்யோன்யமாயிருப்பதாயும் அந்தப்பெண்ணும் என்னைவிடப் பணக்காரியும், M. A. பட்டம் பெற்றவளும் ரூபவதியாயுமிருப்பதாயும், அவளும் எங்கேயோ உத்யோகம் செய்வதாயும், என் கணவருக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் என்றும், அவர்கள் டில்லியில் இருப்பதாயும் சிநேகிதைகள் சொல்லியதோடு என்னையே இட்டி நான் செய்தது மிகத் தவறு என்றும் கூறி இடித்துக்காட்டிய பிறகுதான் எனக்கு மனத்தில் ஒரு சிறிய தாங்கல் உண்டாகத் தொடங்கியது. பணமும் B. A. பட்டமும் ஒன்றுகூடிய திமிரால் என் கதி எப்படி எல்லாம் மாறிவிட்டது! கடவுள் அறிய நான் கற்பு விஷயத்தில் நிரபராதியாயிருந்தும் எப்படி வீணான களங்கமும் படாப்பழியும் உண்டாகி விட்டது என்கிற அதிர்ச்சியான எண்ணங்கள் சிறுகச் சிறுகத் தோன்றி நாளடைவில் மலைபோல வளர்ந்து வந்து என்னையே கொஞ்சங் கொஞ்சமாகத் தின்றுவிட ஆரம்பித்தது. நான் செய்துவிட்ட தவறுதல் பூராவும் உணர்ந்து வருத்தக் கடலில் மூழ்கினேன். என் பிதாவுக்கும் பிறகுதான் மனத்தில் உறுத்தியது; என்றாலும் அவர் ஆண் பிள்ளைதானே! என்னைப் போல கலங்கவில்லை.

நேரில் போய் என் கணவரையும் அவர் மனைவியையும் பார்க்கும்படி சிலர் எனக்குச் சொன்னார்கள். கதைகளில் வருவதுபோல் நான் போய்ப் பார்க்கவும் அவர்களுடைய நிம்மதியைக் குலைக்கவும் நான் விரும்பவில்லை. அச்சமயம் என் பிதாவின் வியாபாரமும் தளர்ந்து திடீரென்று பல தொல்லைகள் உண்டாகிவிட்டன.

அச்சமயம் வை. மு. கோ. எழுதியுள்ள படாடோபத்தின் பரிபவம் என்கிற புத்தகத்தை ஒரு சிநேகிதை கொடுத்து படிக்கச் சொன்னாள். நூற்றுக்கு நூறு அக்கதை எனக்காகத்தான் எழுதியதோ என்று கண்ணீர் விட்டேன். அதில் புருஷன் கதாநாயகன். என் விதியால் நானே கதாநாயகி. இவ்வளவுதான் வித்யாஸம். பணத்தினால்–பதவி—பட்டம்—முதலியவைகளினால் பெற முடியாத மகோன்னதமான பொருள் ஒன்று உண்டு என்பதை உணர்ந்தேன். உணர்ந்து என்ன பயன். வருஷங்கள் தான் ஓடுகின்றன. சில வருஷத்தில் என் பிதாவும் மறைந்தார். சொத்தும் கரைந்துவிட்டது. நான் மதிப்பில்லாத ஒரு பள்ளிக்கூட வாத்தியாராகக் காலத்தைக் கடத்துகிறேன். பட்டமும் பணமும் உண்மையான ஆனந்த வாழ்க்கையைக் கொடுத்துவிட முடியாது. இது உண்மை; உண்மை; பலகாலும் உண்மை. இக்காலத்தில் பெண்கள் அளவுக்குமேல் படிப்பது அதிகமாகி விட்டதால், "என்னைப்போலத் திமிர் பிடித்து வாழாதீர்கள்! நல்ல தருணத்தில் கல்யாணத்தைச் செய்துகொண்டு கணவனுடனும் புக்ககத்தினருடனும் அன்புமயமாக வாழுங்கள்! என்னைப்போலப் பாவியாகி விடாதீர்கள்!" என்று எச்சரிக்கிறேன்.

"உண்மை விளம்பி"

நினைத்ததும் நடந்ததும்

காலத்தை உத்தேசித்து சிக்கனம் என்கிற பிசாசு தானாகவே வந்து பெரிய பெரிய பணக்காரக் குடும்பங்களில் எல்லாம் புகுந்து ஆட்சி புரிகிறபோது மாதம் ஒரு காயத்ரிக்கு—108 ரூபாய்க்குத்—தாளம் போட்டு உழைக்கும் என்னை மட்டும் அந்த சிக்கனம் விட்டு விடுமா? என் சகதர்மிணியாகிய மீனாக்ஷியும் வெகு புத்திசாலி ஒருவேளை சமையல் செய்து இரண்டு வேளைகள் அதைச் சரிப்படுத்துவதோடு காப்பிக்குப் பதில் கேழ்வரகு கஞ்சியும் ஏற்பாடு செய்துவிட்டதால் செலவு எத்தனையோ குறைந்து விட்டது என்று நாங்கள் உண்மையில் சந்தோஷப்பட்டோம். ஒரு தினம் எந்தக்காலத்திலோ எங்க அப்பாவுடன் சிநேகமாயிருந்த ஒரு ப்ரகிருதி திடீரென்று வைத்யத்திற்காக என் வீட்டில் முன்னெச்சரிக்கையின்றி மூட்டையும் முடிச்சுமாக வந்திறங்கியதைப் பார்த்ததும் எனக்கு மூர்ச்சையே போட்டுவிட்டது. என் மனைவிக்கு மூச்சே நின்றுவிட்டது. வீடேறி வந்தவர்களை என்ன சொல்ல முடியும். ஒரு நிமிஷம் நானும் என் மனைவியும் யோசனை செய்து முடிவுக்கு வந்தோம். கேழ்வரகு கஞ்சியைத் தயார் செய்து வந்தவர்களுக்குக் கொடுத்தால் காப்பி இல்லாத ஒரு குறைக்குக் கட்டாயம் ஓடிவிடுவார்கள் என்று எண்ணி அப்படியே கொடுத்தோம். அட க்ரகச்சாரமே! நாங்கள் நினைத்ததற்கு மாறாக அந்த ஆத்மாக்கள் சப்புக்கொட்டி நொட்டைவிட்டுச் சாப்பிட்டபடி, அப்பாடா! நாங்கள் தினம் சாதத்தீர்த்தந்தான் சாப்பிடுவோம். கேழ்வரகு கஞ்சி ப்ரமாதமாய் பாதாங்கீர் போலிருக்கிறது. இன்னும் ஒரு டம்ளர் கொடும்மா என்றபோது எங்கள் கதி கலங்கி விட்டது. இதற்கு என்ன வழி செய்வதென்று திண்டாடினேன்.

பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே வீட்டுக்காரரிடம் போய் ரகஸ்யம் பேசிவிட்டு வந்தேன். அவர் தடபுடலாக வந்து இன்று சாயந்திரத்துக்குள் இந்த இடத்தைக் காலி செய்யவில்லை என்றால் சாமான்களைத் தூக்கி வீதியில் போட்டு விடுவேன். போகிறீர்களா இல்லையா? என்று தடபுடல் கூச்சலிட்டார். உடனே நான் கண்ணீர் வழிவதுபோல் நடித்து, ஐயா! ஒரு சின்ன ரூம் கொடுங்கள். அதில் சாமான்களைப் போட்டுவிட்டு இப்போதே போய் விடுகிறேன். இடம் கிடைத்ததும் வந்து சாமான்களைக் கொண்டு போகிறேன்......ஸார். நீங்கள் எங்காவது இடம் பார்த்துக்கொண்டு போங்கள்! என்று கூறிவிட்டு நாங்கள் இருவரும் வெளியே போய்விட்டோம்.

ஒன்று நினைக்க அது ஒழிந்திட்டொன்றாகும் என்பதுபோல் வெட்கக்கேடு எப்படியாகியது தெரியுமா? வந்த மனிதன் அந்த இடத்திற்குக் கூட 5 ரூபாய் வாடகை கொடுப்பதாகப் பேசி முடித்துவிட்டு என் சாமான்களைத் தாமே மூட்டைகட்டி வெளியில் வைத்திருப்பதைப பார்க்க எங்களுக்கு எப்படி இருக்கும். என்னுடைய நல்ல காலத்தின் பலன் 15 ரூபாய்க்கு என் ஆபீஸ் கிட்ட ஒரு இடம் கிடைத்து விட்டதால் சிக்கனத்தின் சிறப்பில் 10 ரூபாய் மிச்சமாகி விட்டது. எல்லாம் நன்மைக்கே என்பது பொய்யல்ல,

வாழ்க்கை தீபம்

வை. மு. கோ.

ஸௌபாக்ய லக்ஷ்மிக்கு ஆசீர்வாதம். உபயகுசலம். "உனக்குக் கடிதம் எழுதக்கூட ஓய்வில்லையா? ஏன் எழுதவில்லை?" என்று நீ கேட்டு எழுதியிருக்கிறாய். உண்மையில் கடிதமெழுதக்கூட ஓய்வுதான் கிடைக்கவில்லை. உறவுக்காரர்கள் வீட்டுக் கல்யாணங்கள், சிநேகிதர்கள், சம்மந்திகள் ஆக பலர் வீட்டுக் கல்யாணங்களுக்குப் போய்வருவதற்கும் அந்த அலுப்பு ஆறுவதற்குமே சரியாகிவிட்டது. நாள்கழித்து கடிதமெழுதுவது உனக்கு நல்லதாகிவிட்டது. ஏனெனில் பல கல்யாணங்களுக்குச் சென்றதனால் எத்தனைவிதமான விஷயங்களை உனக்கு எழுதும் சந்தர்ப்பம் கிடைக்கிறது பாரு.

1

எத்தகைய விசேஷமும் குறிப்பிடக்கூடிய அம்சங்களில்லாது வெகு சகஜமாய், கம்பீரமாய் பெருமை படக்கூடிய விதத்தில் நடக்கும் கல்யாணங்களைப் பார்ப்பதே அரிதிலும் அரிதாக இருக்கும் இக்காலத்தில் மேல் குறித்தவாறு சிறப்பான கல்யாணம் ஒன்றைப் பார்த்து சந்தோஷித்தேன். பிள்ளை வீட்டுக்காரர்களின் கண்ணியமான பதவியும் சகஜ பாவமும் நிறைந்த த்ருப்தியான மனதையுடையவர்களின் சிறப்புக்குச் சிகரம் வைத்ததுபோல் பிள்ளையாண்டானின் குணமும் ரூப லாவண்யமும், தம்பதிகளின் ஜோடியும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. லக்ஷ்மீ! இன்னொரு அதிசயமென்ன தெரியுமா! கூரைச் சேலை, மாங்கல்யம் முதலியவைகளைப் பிள்ளைவீட்டார் தாமே வாங்கிக்கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. பெண்ணைக் கொடுப்பதுபோல தாலி, கூரை முதலியவைகளையும் அவர்களே கொடுக்கவேண்டும் என்கிற சட்டத்தை சட்டசபையில்லாமலேயே செய்துவிட்டிருக்கும் இக்காலத்தில் அச்சட்டத்தை மீறி நடந்தது என்றால் அது அதிசயிக்கக் கூடிய விஷயமல்லவா!

லக்ஷ்மீ! உலகத்தில் எத்தனையோ விதமான புராணங்கள் நிறைந்திருப்பதுபோல் பிள்ளைவீட்டாரின் கொண்டா புராணம் ஒன்று தனக்கென எழுத்து, அச்சு முதலிய எதுவுமின்றி தானாக ப்ரவசனமாகப் பரவி இருப்பது உனக்குத் தெரியுமல்லவா! நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீட்டில் கொண்டா புராணம் தாண்டவமாடுகிறது. ஆனால் அத்தகைய ஒரு புராணத்தை உண்டாக்குவதற்குப் பாதி பொறுப்பாளிகள் பெண் வீட்டார் தான் என்பேன். கண்டிப்பாய் பெண்வீட்டார் வரதக்ஷிணை கொடுப்பதில்லை என்கிற உறுதியுடன் பிடிவாதமாக இருந்தால் ஓரளவாவது அந்த புராணம் குறையும். தம் பெண்களுக்கு வரதக்ஷிணை கொடுக்கும்போது அதை வெறுத்தும் தாக்கியும் பேசும் சில தாய்மார்கள் தம் பிள்ளைகளுக்கு வாங்கும்போது இரண்டு கைகளையும் தாராளமாக நீட்டுகிறார்கள். இது எந்த தர்ம சாஸ்திரத்தின் பலனோ தெரியவில்லை.

2

இவைகளெல்லாம் ஒரு பக்கமிருக்கட்டும். தீராத வ்யாதிகளைப்போன்ற நிலையில் இது நின்றுவிட்டது. சாதாரணமாக உலகத்தில் ஏழை, பணக்காரர், நடுநிலைமைக்காரர்கள். என்றெல்

லாம் சகஜமாக இருக்கிறதே யன்றி அதில் அதிசயப்படக்கூடிய விஷயமே இல்லை. ஆனால் எத்தகையோருக்கும் மரியாதை, இனிய முகத்துடன் பேசி வரவேற்று உபசரிப்பது, விசாரித்துக் குசல ப்ரச்னம் செய்வது; என்பது ஒரே மாதிரியாகத்தான் அமைந்திருக்கிறது. வேண்டாத மனிதர்கள் வேண்டிவேண்டி அழைத்தாலும் போகப் போவதில்லை. மிகவும் வேண்டியவர்கள், நெருங்கிப் பழகியவர்கள் என்ற முறையிலிருப்பவர்கள், ஒருமுறை அழைத்தால்கூட தவறாமல் போகவேண்டும் என்கிற ஆசையுண்டாகிறது. போகவும் தூண்டுகிறது. அம்முறையில் பிள்ளைவீட்டார் சார்பில் ஒரு கல்யாணத்திற்குச் சென்றேன். லக்ஷ்மீ! பிள்ளை வீட்டாரை அந்தப் பெண்வீட்டார்செய்த அலக்ஷியமும்மரியாதைக் குறைவும் ஒருநாளும் மறக்கமுடியாது. இந்த வைபவத்தை விவரிக்கவே வேண்டாம். ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். அதிலிருந்து நீ பூரா விவரங்களையும் ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற முறையில் தெரிந்துகொள்ளு. எத்தகைய கஷ்டப்படுகிறவர்களாக இருந்தாலும் கல்யாண காலத்தில்பிள்ளை வீட்டாருக்குச் செய்யும் மரியாதை ஒரு தனித்தது என்பது ஜகப்ரஸித்தமானது. பகிரங்கமாக பெண் வீட்டுச் சொந்தக்காரர்கள் பிள்ளை வீட்டாரின் காது கேட்கும்படி, "துப்பத்த பன்னுடைகள்; கையாலாகாத பவிஷுக்கு ஒரு பட்டாளங் தும்பலைமட்டும் கூட்டிக்கொண்டு வந்துவிட்டதுகள். ஆகட்டும் நாளை தாலி கட்டியான பிறகு பார்த்துக்கொள்கிறேன்" என்று தைரியமாகச் சொல்லிய வார்த்தையைத்தான் ஒருவராலும் தாளமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டதில் சிலர் உடனே இளம்பிவிடவும் தயாரானார்கள். இந்த வார்த்தை பாண ப்ரயோகத்துடன் மட்டும் நிற்காமல், 25 பேர்கள்தான் பிள்ளை வீட்டுக்காரர்கள் வருவார்கள்என்று சொன்னார்கள். அந்த அளவுக்குத்தான் சமயல் செய்தது. 15 பேர் சாப்பிட்டாகிவிட்டது. இன்னும் பத்து பேர்களுக்குத்தான் சாப்பாடு! என்று சமயல்காரன் அதிகாரமாய்ச் சொல்லும்படியான கேவலம் நடந்தபிறகு பெண் வீட்டின் மதிப்பு எவ்வளவு என்று நீயே திராசு நிறைபோட்டுக் கொண்டுவிடு. சீர்கள், நகைகள் விஷயத்தில் சொல்லியதொன்று, செய்ததொன்றாகி விட்டது. அதுவாவது நேருக்கு நேர் பிள்ளை வீட்டினருக்கும் பெண் வீட்டினருக்கும் ஏற்படக்கூடிய விஷயம். வந்தவர்களை பாதிக்கும்படி பேசிவிட்ட ஒன்றைமட்டும் உலகம் மறக்குமா? காலம் போகும்,வார்த்தை நிற்கும்!' என்கிற பழமொழி இத்தகைய விஷயங்களுக்காகத்தான் உண்டாகியது போலும். வந்தவர்கள் மனம் புண்ணாகும்படி நடந்துவிட்ட அந்தக்கல்யாணத்தின் பிறகு, இனி எந்தப் பிள்ளை வீட்டுக்காரர்கள் அழைத்தாலும் போகக் கூடாது, போனாலும் நிற்கக்கூடாது—என்கிற மன உறுதி உண்டாகிவிட்டது.

3

புராண வைராக்யம், ச்மசான வைராக்யம், ப்ரஸவதி வைராக்யம் என்று மூன்று வைராக்யங்கள் உலகில் பழயகாலம முதல் நடமாடுகின்றன. அதோடு கல்யாண வீடு செல்லும வைராக்யம்; என்று ஒன்று உண்டாகியது. மேல் குறித்த மூன்றும் எபபடி

நீர்க் குமிழிபோலவே மறைந்துவிடுகிறதோ அதேபோல் இதுவும் மறையும்படி அடுத்த நாளே மற்றொரு கல்யாணத்திற்கு யார் அழைக்கவந்தாலும் சந்தோஷம் தாண்டவமாடும். இப்போதோ கலவரமும் குழப்பமும்தான் நிர்த்தனம் செய்தது. போவதா வேண்டாமா என்றுகூடத் தோன்றிவிட்டது. போகாவிட்டால் மனஸ்தாபம். போனால் எப்படியோ! என்று குழம்பியவாறு நான் மட்டும் சென்றேன்.

அடாடாடா! அந்த கல்யாண வைபவத்தை நான் என்னவென்றுதான் வர்ணிப்பது! லக்ஷ்மீ! வந்தவர்களை வாவென்போரில்லை வராதவர்களை ஏன் வரவில்லை என்று கேட்போரில்லை. யாரென்று நினைக்கிறாய்? என்னை அழைத்த பிள்ளை வீட்டுக்காரர்களே யாகும். முன் கல்யாணத்தில் நடந்ததற்கு நேர்மாறாக பெண் வீட்டுக்காரர்கள் கையைப் பிடித்து தடபுடலாக வரவேற்று உபசரித்து காப்பிகொடுத்துத் தாம்பூலமும் கொடுத்தார்கள். பெண்வீட்டார் என்னவோ அழைக்கவே இல்லை. சென்ற இடத்தில் தடபுடல் அவர்களால் நடந்தது. முகூர்த்தமாகிய பிறகு கல்யாணப்பிள்ளையின் தாயாரைத் தேடினேன். மணவரையில் நாட்டுப் பெண் பக்கத்திலேயே தானும் மணப்பெண்போல் அமர்ந்திருந்தாள். அதுவும் ஒரு வேடிக்கையாகத் தானிருந்தது; "நாட்டுப் பெண்வந்தாளா!" என்று நானாக அவள் கவனத்தைக் கலைத்துக் கேட்டபிறகு, உம்; வந்தாள்! என்றாளே தவிர வேறு பேச்சு பேச நாவெழவில்லை பாவம். நல்ல வேளையாய் இம்மட்டுடன் என்னை விட்டுவிட்டதுபற்றி நான் ஒரு கண்டம் தப்பித்ததுபோல் சந்தோஷப்பட்டேன. தாம்பூலம் வாங்கிக்கொண்டீர்களா என்றுகூட கேட்கவில்லை. செத்தேன் பிழைத்தேன் என்று வீட்டிற்கு வந்துவிட்டேன்.

4

பிறகு குடும்பசகிதம் அன்றே ஒரு ஆப்தர்வீட்டில் நடந்த சஷ்டி பூர்த்தி சாந்திக்குச்சென்றுவிட்டோம். தம்பதிகளின் அன்பான குளிர்ந்த புன்னகையுடன் கூடியவரவேற்பும் அவர்களுடைய நாட்டுப்பெண்,பெண் ஆகியவர்களுடைய ஒபபுயர்வு இல்லாதஅன்பின் வசீகரமும் எங்களை அப்படியே பரவசப்படுததிவிட்டது. வேறு எந்தகல்யாணமும் கிடைத்துவிடும். சஷ்டி பூர்த்திகிடைப்பது மிகமிக அரிது. அத்தகைய கல்யாணத்தில் நாங்கள் கலந்து கொண்டு பூரித்தது சொல்லிமுடியாது. அன்று பூராவும் அந்த விமரிசை நிறைந்த இனிமை நிறைந்த கல்யாணத்தில் மகிழ்ந்து குதூகலித்தோம். முப்பத்த பன்னுடைகள்; என்ற பட்டம்பெற்ற அதிர்ச்சி இந்த அறுபதாம் கல்யாணத்தின் ஆநந்தத்தில் சற்று மறைந்தது எனலாம். வைதிகம், லௌகிகம் இரண்டும் சரிசமமாய் விடாமல் செய்தது குறிப்பிடத்தக்கது. தவிர இன்னொரு பெருமைபடக்கூடிய விஷயம் என்னவென்றால், கல்யாண தம்பதிகளின் நாட்டுப் பெண்கள், பெண் ஆகியவர்கள் தாம் தாம் சம்பாதித்துள்ள தொகையிலிருந்து தாய் தந்தையருக்கு பொருக்கான நகைகளைச் செய்துபோட்டு இன்புற்றது குறிப்பிடத் தக்கதாகும்; அதோடு இனமொன்று அதிசயிக்கக் கூடியது என்னவெனில் அறுபதுவிதமான, பொருள்கள் பழவகைகள்,

பாதாமி, முந்திரி, கல்கண்டு முதலிய சகலவித பதார்த்தங்களும் தனித்தனியே தட்டுகள் சீர்வைப்பதுபோல் யுக்தியும யோசனையும்கூடி செய்திருந்தது வெகு பொருத்தமாக இருந்தது. குடும்பத்தின் முக்யஸ்தர்களுக்கு எல்லாம் சேலை, ரவிக்கைகள் வாங்கி கல்யாண முகூர்த்தமாகிய உடனே சம்பாவனை செய்து கவுரவித்ததும் போற்றக்கூடியதாகும். அதேபோல் பந்துக்களும் தம்பதிகளுக்குப் பரிசளித்தார்கள். இத்தகைய சஷ்டி பூர்த்தியன்று மாலை ஸ்ரீராமாயண பட்டாபிஷேகம் உபன்யாஸம் நடந்தது பின்னும் கொண்டாடக்கூடிய விதத்தில் அமைந்தது.

5

லக்ஷ்மீ! கல்யாணத்தில் ஆயிரமாயிரமாய்ச் செலவுசெய்து கல்யாணத்தின் பெருமையில் சிலர் மூழ்கிவிடுகிறார்களே யன்றி ஊரழைக்க விமரிசையே தெரிவதில்லை. குங்குமத்தை மட்டும் நீட்டிவிட்டு ஒருமாதிரி அசடு வழிய சிரித்துவிட்டு சிலர் ஒன்றுமே சொல்லாது போய்விடும் வேடிக்கையை மறக்கமுடிவதில்லை. பின்னும் சிலர்; குங்குமத்தைக் கொடுத்ததும், கல்யாணம் தெரியுமோன்னோ!... அதோடு ஒரு சிரிப்பு. தீர்ந்துவிட்டது அழைப்பு! இன்னும் சிலர் பலான தேதி கல்யாணம் கட்டாயம் வரணும். இன்னும் சிலர், உங்களைக்கூட அழைக்கணுமா என்ன... அவச்யம் வந்துடுங்கோ... இப்படியாக எத்தனையோவிதம் இருக்கிறது; சாப்பிடுவதற்கு முதலில் சொல்வதே இல்லை. முகூர்த்தத்திற்குச் சென்றவிடத்தில் கட்டாயப்படுத்திச் சாப்பிடச் சொல்வது சிலருடைய வழக்கம். இந்த முக்ய விஷயத்தில் எத்தனை தடமாட்டம். எத்தனை அசட்டுத்தனம் தெரியுமா! கல்யாணத்திற்கு அழைக்கவந்தால்...பலான தேதியில்...பலான மணியில் முகூர்த்தம். பலான இடத்தில் நடக்கிறது; முதல் நாள் ஜானுவாஸ ஊர்வலம் மறுநாள் கச்சேரி; முதலிய எல்லாவற்றையும சொல்லிவிட்டு கட்டாயம் சாப்பாட்டிற்கும் சகலத்திற்கும் வரவேண்டும் என்று பெருமையாக யாருமே கூப்பிடுவதில்லை. கூப்பிடுவதற்குத்தான் சோம்பல் என்றால் விவரமாக கடிதத்தில் அச்சடித்துவிடலாம்.

6

ஏதோ ஒவ்வொருவருடைய போக்கு ஒவ்வொருவிதமாயிருக்கிறது. இன்னொரு கல்யாணத்தில் பாரு. சொல்லியபடி செய்யவில்லை என்பதால் இருதரத்தினருக்கும் சண்டை வந்துவிட்டதாம்; அந்த வேகத்தில் கல்யாணத்தன்று மாலையே பெண் சகிதம் கிளம்பிப்போய்விட்டார்களாம்; பெண்ணின் தகப்பனார் என்ன சொல்கிறாராம் தெரியுமா! எப்படியும் என் பெண்ணை அழைத்துப் போயாயிற்று, இனி எனக்கென்ன? என்கிறாராம்! உலகம் பலவிதமல்லவா! இதுபோல் அபூர்வ நிகழ்ச்சிகள் நிறைந்த கல்யாணங்கள் அநந்தம்; எது எப்படி இருப்பினும் பெண் வீட்டாராகட்டும், பிள்ளை வீட்டாராகட்டும் வாயை விட்டுவிடாமல் இருந்தால் அதுதான் பெரிய காரியம்...லக்ஷ்மீ! இன்னொரு விசித்திரமான கல்யாணம் பார்த்தேன்; அதைப் பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

—உன் பாமி

திருமாலை

கீர்த்தனை

ராகம்: ஸரஸ்வதி

தாளம் : ரூபகம்

பல்லவி

த்ரு	லகு	த்ரு	லகு
ப த	— ப ப ம ம	ப த ப ம	— மா பா தா தா
ப ா	— யு . நீ ர்	அ . ர ங்	— . க ந் த ன்
பா தா ப த நி த	— பா ப த ப ம மா	ப த நி த	— . . ப ம பா தா தா
பா	— . யு , நீ . ர்	அ . ர ங்	— க ந் த ன்
ப த	— ப ப ம ம	ப த ப ம	— ரீ ரீ ரீ ஸ ா
ம ா	— ய . ஞ ர்	தி . ரு .	— ந ன் – மார்வும்
டை	— டை	டை	— டை

த்ரு	லகு	த்ரு	லகு
ஸ் ஸ்	— ஸ் ஸ் ஸ் ஸ்	நி த	— ப ம ரி ம ‖
னு ள்	— . . பா	ம் ப ணை	— ப்பள்ளிகொண்ட ‖
டை	— டை	ப த ஸ ா	— ப தரிஸ்நிதபம ‖
. .		ப . ணை	— ப்பள்ளிகொண்ட ‖
ரி ரி	— ஸரிமாரிமபா	ப த ஸ ா	— ஸ்தரிஸ்நிதபம ‖
ம ர	— க , த வு . ரு	வு , ம்	— .. தோ . . ளும் ‖
ரி ரி·ஸ ரி	— ம ம ம ம ரி ம ப ம	த த ப த	— ஸ்த ரிஸ்நிதபம ‖
ம . ர .	— . க . த . . . . வு	ரு . . .	— .வும் தோ . . ளும் ‖
			பா ‖
			பா ‖

அநுபல்லவி

த்ரு	லகு	த்ரு	லகு
ஸ்ா ஸ் நி	— நித்தாஸ்ாஸ்ா	ரீ ரீ	— ஸ்ாஸ்ா நிதபத
தூ . . .	— ய . . தா .	ம ை ர	— க் க ண் க ளும்
ஸ் ா த ஸ்	— ரீ ஸ் நி த தஸ்ா	டை	— டை
தூ . .	— . . ய . . தா		
ரி ரி	— ஸ் ஸ் நி நி	ஸ் . நி	— த ப ப ம
ஆ .	— ய . சி ர்	மு டி	— யு ம் தே . சும்

த்ரு	லகு	த்ரு	லகு
ஸ் ா ரீ	— ஸ்ரி மா மா ரி ம	பா ப ம்	— ரீ ரீ ஸ் ா ஸ் ா ‖
து வ	— ரி . த ழ் . ப .	வள .	— வ ா யு ம் ‖
ஸ் ரீ ரி	— ரி ரி ரி ம ா ம	பதபம	— ரீ ரீ ஸ்ா ஸ்ா ‖
து வ.	— ரி த ழ் . . . ப	வ . . .	— ள வா , யும் ‖
ப ம ப த	— த ப த ஸ் ர் ப த	ரி ஸ் நி த	— பமபம ரிஸ்ரிம ‖
அ . டி	— ம . ரோ ர் க் .	க . . .	— ல . லா . .மே ‖
			பா ‖
			பா ‖

சரணம்

த்ரு	லகு	த்ரு	லகு
ப தி	— ப ப த த	த த	— ப தரிஸ்ரீ தா
ப ணி	— வி . ஞ ல்	ம ன	— ம . தொன்றி .
ப த	— ப ப ம ம	ப த ப ம	— ரீ ரீ ரீ ஸ ா
து ணி	— வி . ஞ ல்	வ ா . .	— ழ . மா ட்டா
ஸ் ா ஸ் நி	— நி த தாஸ்ாஸ்ா	ரீ ரீ	— ரீ ஸ்ா ஸ்ா ஸ்ா
அ ணி .	— ம . . ஞ ர்	செ ம்	— பொன் ஞ . ம
ரி ரி	— ஸ் ஸ் நி நி	ஸ் நி	— த ப ; ம ;
ம ணி	— ம . ஞ ர்	இடர்	— த வாற் றை .
			மத்யமகாலம்
பா பா	— பா ப ம ப த ா த	பத ஸ் ஸ்	— பதரிஸ்நிதபம
கங்கை	— யின் புனிதமாய	கா விரி	— நடுவு , பாட்டு
ஸ ா நீ	— த தஸ்ஸ்ஸ்ரிரிரி	ஸ் ரி ம ம	— ரி ம ப மரீஸா
ரங்கன்	– மாலிறைவனிசன்	கிடந்ததோர்-கிடக்கை. கண்டும்	

த்ரு	லகு	த்ரு	லகு
தஸ் . நித	— பா பா மா மா	ப த ப ம	— ரி ஸ ரி மபாமா ‖
ப . வ .	— ள . வா	ய . ரங்	— க . ஞ .. ர்க்கு ‖
ரீ ரீ	— ஸ ரி மா மா பா	ப த ரி ஸ	— நித பா பா பா ‖
த்தொல்லை	— நெ . ஞ் சே . .	நீ . . .	— சொல்லா . ய் ‖
ரீ ரீ	— ஸ் ரி ம ா ரி ம ப ம	ப ா ப ம	— ரீ ரி ர் ஸ் ர் ‖
அரு	— வ . ரைய . ளை .	ய கோ	— . . . யி ல் ‖
ப ம ப த	— தா தப த் ஸ்ஸ் த	ரி ஸ நி த	— பா ப மரிஸரிம ‖
ம . ன த்	— தி ஞ ல் நி	ளை . . .	— க்கலா மே . ‖
ப த ப ப	— ம ம ப ம ரி ரீ ஸ	ரீ ம ம	— ரிமபமபாபா ‖
பொங்கு .	— நீர்பரந்து பாயும்	பூம்பொழி	– லரங்கந்தன்னுள் ‖
ரி ரி ஸ் ஸ்	— நி நி ஸ் நி த பா ம	ப த ஸ் ஸ்	— பதரிஸ்நிதபம ‖
எ ங் ங	— னம்மறந்துவாழ்கேன்	ஏழையேனு	— ஏ–ழையே. னே. ‖

சிறுகதை

குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி

"சரியான பாடம்"

ஆபீஸிலிருந்து வந்தஉடனே நான் ஆவலாகக் காப்பிடிப்பனை ப்ரம்மாநந்தமாக ரஸித்து, ருசித்துச் சாப்பிட்டபிறகுதான், மக்கள் மனைவியுடன் பேசுவேன். அத்தகைய நான் ஆபீஸிலிருந்து வரும்போது, ஸார் ஸார்! என்று என்னைக் கைத்தட்டி ஒருவர் கூப்பிட்டார். ஆர்வத்துடன் திரும்பிப்பார்த்தேன். கூப்பிட்டவர் காகிதத்தை நீட்டினர். கடிதத்தைக் கையில் வாங்கிப் பார்த்ததுதான் தாமதம்! மயக்கம்போட்டு அப்படியே விழுந்துவிடுவேன் போலாகிவிட்டது. மெல்ல சமாளித்துக்கொண்டு அசடுவழிய பல்லைப்பிளந்துகொண்டு நாளை தினம் கடைக்கு வருகிறேன். என்று சொல்லிவிட்டு நடந்தேன். அந்த காகிதத்தில் நான் கண்ட விஷயம் ஏதோ என்னவோ என்று எண்ணிவிடாதீர்கள். என் சினேகிதர்கள், உறவுக்காரர்கள், மனைவியின் அபூர்வ சினேகிதைகள், அவளுடைய உறவுக்காரர்கள், என்னுடைய அபார சமர்த்துக்களான பெண்ணின்...பிள்ளையின் உபாத்யாயர்கள், ப்ரைவேட்டு வாத்யாயர்கள், ஆகமொத்தம் சுமார் ஒரு 50 கல்யாணங்கள் நடந்து என்னைத் திணறவைத்துவிட்டது.

கல்யாணக்காரர்கள் மூச்சுத்திணறினார்களோ! இல்லையோ! என்பாடு அடாடாடா! இனிமேல் சொல்லவே முடியாதபடி ரயில் சார்ச்சும், பஸ் சார்ச்சும். கல்யாண தம்பதிகளுக்குத் தக்காருக்குத் தக்கபடி வெள்ளி, எவர்ஸில்வர், ஸில்கு, முதலிய பரிசுகளின் தொகையும் கல்யாணத்திற்குப் போவதற்காக என் தர்மபத்னியும் புத்ரகாமேஷ்டிசெய்து பிறந்துள்ள குசேல சந்தானங்களுக்கும் புது ஜவுளிகள், வளைகள், ரிப்பன்கள், குஞ்சலங்கள், பவுடர், ஸ்னோ, ஸோப்பு, இத்யாதி வகைகள், ஆக எல்லாம் சேர்ந்து என்னுடைய மூன்றுமாதச் சம்பளத்தை ஒரேயடியாக விழுங்கி விட்டது என்றால் கேட்கவாவேணும். அந்தவகையில் வெள்ளிக் கடைக்காரனின் பில்லை வெள்ளிசாக 167 ரூபாயைப் பார்த்த உடனே தலைசுத்தாமல் என்ன செய்யும். இன்னும் நான்கடி தள்ளினால் ஸில்குகடையில் 55-ரூபாய்பில்லு என்னை எதிர்பார்த்து கிற்கிறது. அடுத்த தெரு அருணாசலத்தின் எவர்ஸில்வர் கடையில் 40 ரூபாய் நாக்கை வளைக்கிறது. ச்சீ! இவைகளை எல்லாம் எப்படி துலைத்துத் தலை முழுகுவது என்று நினைத்தபடியே என் கைவிரல்மோதிரத்தைப் பார்த்தேன். "உன்னை ஒழித்துக்கட்டி விடுவதைத்தவிர வேறு இல்லை...இனிமேல் யார் விட்டுக் கல்யாணத்திற்கும் போவதே இல்லை. உடம்பு சரியில்லை என்று சொல்லி மரியாதையாய் ஒரு கடிதம் எழுதிவிடுகிறேன்" என்று நினைத்தபடியே விட்டுப் படிஏறும்போது உண்மையில் நான் கண்ட காட்சி என் மூச்சே தடைபட்டுத்தான் போயிற்று.

என் தங்கையின் மகளுக்குத் திடிரென்று கல்யாணம் நிச்சயமாகியதாம். அடுத்தவெள்ளியன்று முகூர்த்தமாம். நான் அம்மானையால் என் தங்கையும் தங்கை கணவனும் ப்ரஸன்னமாகி என் மனைவியுடன் அம்மான் கோலத்திற்கு ஆறு கஜம் டிஷ்யூ ஸாரி வாங்கினால் போதும். கைக்கு மூன்று வைரம் வைத்த வளி, தனக்கு ஆப்பிள்கலர்புடவை. பிள்ளைக்கும் பூணூல்வேறு போடுவதால் பொற்பூணூல், வெள்ளிப்பூணூல், பிச்சரிசிவெள்ளித்

தட்டு, பஞ்சபாத்திரம், வேஷ்டிபட்டு, சகலவித சாமான்கள் சகிதம் அவர்கள் உட்கார்ந்து அவைகளைக் காட்டிப் பேசுவதைப் பார்த்தும் கேட்டும் தலை தட்டாமாலை சுற்ற நானும் உள்ளே சென்றேன்.

தங்கையும் மாப்பிள்ளையும் தடபுடல் உபசாரத்துடன் பேசி வரவேற்றபடி, அண்ணா! காலநிலையை ஒட்டி நீ இம்மட்டும் செய்தால் போதும் என்று நானே ஒரு சிறு தொகைக்கு இவைகளை வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். பில்லுகள் இதோ இருக்கிறது. திடீரென்று நல்ல இடமாகக் கிடைத்ததால் துணிந்து வைத்துக்கொண்டு விட்டேன். மாப்பிள்ளையாண்டானுக்கு வேண்டிய ஜானுவாஸா உடைகளைமட்டும் உன்னுடைய வாடிக்கைக்கடையில் கடனாக வாங்கிக்கொடு. 500 ரூபாய் ட்ரஸ்ஸுக்காகக் கொடுப்பதாக வார்த்தை. ஆதலால் அந்த அளவு மாப்பிள்ளையின் இஷ்டப்படி வாங்கிவிடு. பிறகு நான் கொடுத்து விடுகிறேன் என்றாள்.

இதுவரையில் ஒருவாறு தாக்குப்பிடித்த என்னுடைய நெஞ்சு அதற்குமேல் தாங்க முடியாமல் தவித்து செயலற்று விட்டது. உண்மையில் மயக்கம் என்பதை நான் கண்ணால்கூட பார்த்ததில்லை. எனக்கு வந்ததே இல்லை. ஏதோ மாதம் பிறந்தால் 200 ரூபாய் சம்பளம் வருகிறது. சாப்பாட்டுக்கு அரிசி ஊரிலிருந்து வந்து விடுவதால் ஏதோ பூடகமாய் காலக்ஷேபம் செய்து கொண்டு வந்தேன். திடீரென்று இத்தனை செலவுகளும் தாங்க முடியாமல் தலைமீது விழுந்த வேகத்தில் மயக்கம் போட்டு விட்ட நான் கண்ணைத் திறந்து பார்க்கையில் ஆஸ்பத்திரியில் இருப்பதையறிந்து முதலில் பயந்தேன். பிறகு சற்று தெளிவு பெற்றேன். காரணம் என்ன தெரியுமோ! இதயம் மிகவும் பலவீனமாகிவிட்டது. அதற்கு உயர்ந்த மருந்துகள் கொடுக்க வேண்டும். ஊசி போட வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லி காபுரா செய்துவிட்டதன் பலன் என் மாமனார் கையிலிருந்த 500 ரூபாயை அப்படியே கொடுத்து வைத்யம் செய்ய முன்வந்தார். என் மனத்திலுள்ள பாரம் யாருக்குத் தெரியும். 500 ரூபாயில் கடன் கொடுக்க வேண்டிய பளுவைத் தீர்த்துவிட்டு நல்ல டானிக்கு சாப்பிட்டபடி படுக்கையில் 15 தினங்கள் இருந்து விட்டேன்.

தங்கையின் 500 ரூபாய் எதிர்பார்ப்பும் பறந்து போயிற்று. அம்மான் சீருக்காக ஏதோ சுமாராக அனுப்பித் தப்பித்துக் கொண்டேன். அதன் பிறகு ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அதாவது இனிமேல் கல்யாணம் யாருக்கு வந்தாலும் ஒரு குறிப்பிட்ட தொகையை மணியார்டரில் அனுப்பிவிட்டு உடம்பு சரியில்லை என்று கூறி ரயில் சார்ஜையாவது மீத்தலாமோ என்று எண்ணினேன்.

அதே சமயம் என் மைத்துனிக்கே கல்யாணம் என்று மாமனார் அழைக்க வந்தபோது 50 ரூபாயில் ஒரு பட்டுச் சேலையை மைத்துனிக்காக வாங்கிக்கொண்டு ஒரு வாரம் லீவும் எடுத்துக்கொண்டு குடும்ப சகிதம் கிளம்பினேன். கடலின் அலைக்கும் ஒய்வில்லை. மனிதர்களின் எண்ணமாகிய அலைக்கும் ஒய்வில்லை. இந்தத் தத்துவத்தைப் பிறகு தெரிந்துகொண்டேன். அவச்யமான செலவையும் நேசத்தையும் யாராலும் குறைக்க முடியாது. அதிக படாடோபமும் டம்பமும் மட்டும் ஒழிந்தால் தலை தூக்கலாம் என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டுவிட்டேன்.

பூஷணிப் பழம்

டேய் குண்டப்பா..........என்ன பலமான யோசனையில் ஆழ்ந்து இருக்கிறாய். எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போகிறாய். நானும் உதவிக்கு வரட்டுமா? என்று குறும்புத் தனமாய்க் கேட்டுக் கொண்டே சுரேஷ் கோபுவின் முதுகில் ஒரு தட்டு தட்டினான்.

சிந்தனையில் சிக்கித் தவித்துக்கொண்டு இருந்த கோபு சோகமே உருவான தன் முகத்தை உயர்த்தி .. ஊம் நீ என்னை என்ன பேர் சொல்லிக் கூப்பிட்டாலும் பதில் சொல்ல வேண்டியது தானே...குண்டப்பாவோ, குண்டுதடியோ எதை யாவது கூப்பிடு...ஆனால் நான் கேட்கும் உதவியை மட்டும் செய்தால் போதும். நான் கேட்டேனே புஸ்தகங்கள் நாளைக் குள் தயவுசெய்து கொடுத்துவிடு. சுரேஷ்! நாளை புஸ்தகம் இல்லை என்றால் வாத்யார் வகுப்பிலிருந்து துரத்திவிடுவேன் என்று சொல்லி இருக்கிறார். பாடம் நடந்து கொண்டே இருக்கிறது...சுரேஷ்! தயவுசெய்து கொடப்பா...புண்யமாய்ப் போகும்.

சுரேஷ்:—நீ கேட்ட பிறகுதான் ஞாபகத்திற்கு வரு கிறது கோபு. நான் தேடியே பார்க்கவில்லை. எங்கே இருக் கிறதோ...சரி நாளைக்குத் தேடி வைக்கிறேன்.

கோபு:—கட்டாயம் தேடி வைக்கிறாயா! மறக்கமாட்டாயே ஏதோப்பா...இந்த ஏழைமேல் கொஞ்சம் க்ருபை செய். நீ பணக்காரன். ஒரு ஏழைக்கு தர்மம் செய்ய முடியும் என்பதால் கேட்கிறேன். என்று கெஞ்சிக் கேட்டான்.

சுரேஷ்:—ஏது ப்ரமாதமாய் நடிக்கக் கத்து இருக்கிறாய்; புஸ்தகம் வாங்கத்தான் பணம் இல்லை என்று என் ப்ராணனை வாங்குகிறாய்; இப்படி உடம்பை ஊத அடிக்க சாப்பாட்டிற்கு என்னசெய்கிறாய்? என்று விளையாட்டாய் கேட்டான்.

கோபு:-ஊம்....அதற்கு உங்களைப்போல் நாலுமகாராஜாக்கள் கிடைக்காமலா போகிறார்கள். ஒவ்வொரு வீட்டில் ஒவ்வொரு நாள் வாரச்சாப்பாடு சாப்பிட்டு வயிற்றை வளர்க்கிறேன். ராத்திரி ஏதாவது கிடைத்தால் உண்டு. இல்லை என்றால் காற்றுதான்.

சுரேஷ்:—அதானே கேட்டேன்....காற்று சாப்பிட்டுத்தான் பெலூன்போல் உன் உடம்பு ஊதி விட்டதா! எனக்கும் அந்த வித்தையைக் கற்றுக்கொடடா! எங்க அம்மா நான் பெருக்க வேண்டும் என்று பாலும், பழமும் பாதாம் பருப்பு மாகவே ஊட்டுகிறாள். பெருக்க மாட்டேன் என்கிறது.

கோபு:—உலகம் அப்படி தானேப்பா...,வேண்டும் என்பவர் களுக்குக் கிடைக்காது; வேண்டாம் என்பவர்களுக்குக் கிடை

த்தே தீரும். நான் பெருமனாய் இருப்பதால் எவ்வளவு கஷ்டப் படுகிறேன் தெரியுமா? சம்பளம் கட்ட நான் மாதாமாதம் படும் ஹிம்சை கடவுளுக்குத்தான் தெரியும்....சம்பளத்திற்கு கால், அரை, பணம் கொடுப்பவர்கள், ஏன் தம்பி! சம்பளம் கட்ட சக்தி இல்லை என்று கேட்கிறாயே..........உன் சரீரத்தை கவுடு இல்லாது வளர்க்க உனக்கு எப்படி உங்க அம்மா சாதம் போடுகிறாள்? அதற்கு எப்படிப் பணம் கிடைக்கிறது? என்று கேலியாய்க் கேட்கிறார்கள். பீமனைப்போல் உடலைக் கொடுத்த கடவுள்சௌகர்யத்தைக்கொடுக்காது ஏழையாய்ப்பிறப்பித்து விட்டான். பெருமனால் நான் படும்பாடு போதும் என்று இருக்கிறது. அதுமட்டும் மகாராஜன் 100 ரூபாய்க்குள்சம்பளம் வாங்கும் உத்யோகஸ்தர்களின் குழந்தைகளுக்குச் சம்பளம் இல்லை என்று சட்டம் கொண்டு வந்தார்களே, எத்தனையோ பாவத்திற்கு மத்தியில் நான் செய்த ஒரு புண்யம்தான். அதேபோல் நீயும் புஸ்தகம் உதவி செய்தால் போதும்... என்று சொல்லும்போது கோபுவின் கண்களில் கண்ணீர் துளிர்த்துவிட்டது.

சரி. நாளை காலை வா! என்று திட்டமிட்டவாறு சுரேஷ் ஓட்டம் பிடித்தான். படிப்பில் அதிக ஆர்வம் உள்ள கோபு, எப்போது உதயமாகும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான். சீக்கிரமாய் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சுரேஷின் வீட்டை அடைந்தான். அப்போதுதான் தூங்கி எழுந்த சுரேஷ் தூக்கம் தெளிந்தும் தெளியாததுமாய்க் காட்சி அளித்தான்.

முதல்நாள் கோபுவின் துக்கமாரி சொற்களைக் கேட்ட சுரேஷ், வந்தஉடனேயே அவனுக்கு வேண்டிய புஸ்தகங்களைத் தேடி எடுத்து வைத்தான். ஆனால் எதனாலோ அவைகளை இனாமாகக் கொடுக்க மனம் வரவில்லை. அந்தப் புஸ்தகங்களை மற்றப் பிள்ளைகளைப்போல் பாதி விலைக்குவிற்று, அந்தப் பணத்தில் சலிக்க ஹோட்டலில் டிபன் சாப்பிட வேண்டும் என்று ஆசை. ஆனால், அவன் தாயார், நன்றாய் படித்துப் பாஸ் செய்து மேல் வகுப்பு வந்த பிறகு பழைய படித்த புஸ்தகங்களை விலைக்கு விற்றுவிட்டால் படித்த கல்வியை விற்றுவிட்டதுபோல் அர்த்தம். அதனால் விற்கக்கூடாது. யாராவது ஏழைக்குக் கொடுத்துவிடு. அது உனக்குப் புண்யம் என்று சொல்வதால் விலைக்குக்கொடுக்கமுடியாது தவித்தான் அதனால் அரைமனதுடன் கோபுவுக்குக் கொடுப்பதாய்ச் சொல்லிஇவ்வளவு நாள் இழுக்கடித்து இன்று கொடுப்பதாய் வரச்சொல்லி இருந்தான்.

கோபுவைப் பார்த்த சுரேஷ் ஓரே மூச்சில் காப்பியை குடித்துவிட்டு வந்தான். சதா குறும்புத்தனமாகவே விளையாடும் சுரேஷுக்கு கோபுவைப்பார்த்ததும் சட்டென்று

ஒரு யோசனை உண்டாயிற்று. கோபுவை அணுகி, கோபு! புஸ்தகங்கள் எல்லாம் பார்த்து எடுத்து வைத்து இருக்கிறேன். ஆனால் ஒரு கண்டிஷன். நான் எது சொல்கிறேனோ அதை எல்லாம் கட்டாயம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் கொடுக்கிறேன் என்று ஒரு போடுபோட்டான். கோபுவுக்கு இருக்கும் நிலையில் உதைத்தால்கூடப் பட்டுக் கொள்ளத்தயார். எப்படியாவது புஸ்தகம்கிடைத்து, படித்து, முன்னுக்கு வந்தால் போதும் என்று இருக்கும்போது ஏன் ஒப்புக்கொள்ள மாட்டான்? உடனே சம்மதித்தான்.

இதோபார் கோபு! அந்தத் தென்னைமரம்வரை நான் 20 எண்ணுவதற்குள் ஓடிப்போய், திரும்பி வந்துவிட வேண்டும். அப்படி வந்தால் உடனே கொடுத்து விடுகிறேன் என்றான். எந்த மலையைப் புரட்டச் சொல்லுவானோ என்று பயந்துக் கொண்டு இருந்த கோபு இவ்வளவுதானே ப்ரமாதம். ஊம் 'ஒன், டூ, த்ரி' சொல் ஓடுகிறேன்என்றான்; சரி என்று சம்மதித்த சுரேஷின் வாயில் இருந்து த்ரீ என்று வெளி வந்ததுதான் தாமதம், பூஷணிப் பழம் உருளுவதுபோல் தொப்பைகுலுங்க ஓட்டம் எடுத்தான் கோபு.

கோபு தொப்பை குலுங்க பிப்பாய் உருளுவதைப்போல் ஓடுவதைப் பார்க்கவே ஆசைப்பட்ட சுரேஷ் விழுந்துவிழுந்து சிரித்தவாறு கடகட என்று ஒன்று இரண்டையும் விடாது எண்ணிக்கொண்டே போனான். 20 சொல்லி முடித்ததற்கும் கோபு தென்னைமரத்தைத்தொட்டுத்திரும்புவதற்கும் சரியாய் இருந்தது. ஏய் நீ தோற்று விட்டாய்; திரும்பவும் ஓடினால் தான் என்று இறைந்தான் சுரேஷ். மூச்சு வாங்க வேறு வழியின்றி வந்து நின்றான் கோபு.

ஒரு தடவை, இருதடவை என்று திரும்பத்திரும்ப ஓடிக் கொண்டே இருந்தானே தவிர பாவம் கோபுவால் ஒருதடவை கூட 20 எண்ணுவதற்குள் வரமுடியாது தத்தளித்தான். வேர்க்க வெலவெலுக்க வேர்வைகொட்ட மூச்சுத்திணறியவாறு மனம் தளராது மறுபடியும் ஓட வந்து நின்றான். ஓ இந்த தடவை ஓடுவது; முடிந்தால் சரி; இல்லை என்றால் போகிறது. ஒரு ஏழைக்கு உதவி செய்வதற்கு இப்படி ப்ராணனை வாங்கியா தரவேண்டும்? சீ கொடுக்கா விட்டால் போகிறான்! என்று சுரேஷின் மேல் கோபம்கோடமாய்ப்பற்றிக்கொண்டு "த்ரீ" என்ற சப்தம் கேட்ட உடனே ஓடினானோ இல்லையோ அவனை அறியாது, தலை ஒரே அடியாய்ச் சுழன்று கண்ணை இருட்டியது; தடாலென்று அப்படியே பூமியில் சாய்ந்தான்.

ஸ்வாரஸ்யமாய் எண்ணிக் கொண்டு இருந்த சுரேஷ், அவன் இடமே விழுந்ததும் தடுக்கி விழுந்துவிட்டதாய் நினைத்து, அடபாவி, மலை பொளுவதுபோல் உருண்டு

விட்டாயேடா! என்று சிரித்தவாறு ஓடிவந்து தூக்கினான். கோபு மூச்சுபேச்சின்றி துவண்டு கிடப்பதைப்பார்த்து பயந்து கோபு...கோபு...என்று கூப்பிட்டான். ஆனால் பதிலே இல்லை. ஒரே அடியாய் அலறிக்கொண்டு சுரேஷ் தன்னையும் மீறி "கோ" என்று கத்தி விட்டான். இவன் கூக்குரலைக் கேட்ட அவன் தாயார் பதைபதைக்க ஓடி வந்தாள். கோபுவின் நிலைமையைப்பார்த்து ஒன்றும்புரியாதுபதறி, தோட்டக்காரனைப் பிடிக்கச்சொல்லி கோபுவைஉள்ளே தூக்கி வந்தாள். முகத்தில் தண்ணீர் தெளித்துக்கொண்டே டாக்டரை அழைத்து வர ஆளை அனுப்பினாள்; ஒன்றும் புரியாத சுரேஷ் அழத்துடங்கி விட்டான்.

ஓடிஓடி களைத்து சிவந்து இருக்கும் கோபுவின் முகத்தைப் பார்த்து, சுரேஷின் தாயார் நடந்ததை சுரேஷிடம் விசாரித்தாள். பயத்தால் கிலிபட்டு இருந்த சுரேஷ் நடந்ததை பூராவும் ஒளிக்காமல், மறைக்காமல் சொல்லி முடித்தான். அதன் பிறகு சற்று தெம்புகொண்ட அவன் தாயார், அட தர்ம ப்ரபு! இவ்வளவு கருணை உள்ளமாடா உனக்கு; நன்றாய் முன்னுக்கு வருவாய்! ஒரு ஏழைக்குப் புஸ்தகம் கொடுக்க இப்படியா அவன் ப்ராணனை வாங்கவேண்டும்! நல்ல புண்ய சாலிதான்! என்று சொல்லிக்கொண்டு இருந்தசமயம் டாக்டர் வந்தார்.

அதற்குள் சற்று தெளிவுபெற்ற கோபு பதறிக்கொண்டு எழுந்தான். அவனை உடல் பூராவும் சோதித்த டாக்டர், இவனுக்கு உடம்பில் ஒன்றும் கோளாறு இல்லை; எதனால் மயக்கம்? என்று சிந்திக்கலானார். சுரேஷின் தாயார் தன் அருமைப் பிள்ளை நடத்திய லீலைபூராவும் சொல்லி காலை வேளை வெய்யில் பித்தம் என்பார்களே அதனால் இருக்குமா? என்று கேட்டாள்.

அதையே ஆமோதித்த டாக்டர் கட்டாயம் அதுவே தான் பித்தம், பட்டினி, ஓய்ச்சல் இருந்தால் அப்படி மயக்கம் வரும்; வேறு கெடுதல் ஒன்றும் இல்லை. ஏதாவது ஆகாரம் கொடுங்கள்; களைப்பு தீர்ந்தால் சரியாகும் என்று சொல்லிச் சென்றார்.

உடனே சுடச்சுட காபி கொண்டுவந்து கோபுவைக் கச் செய்தாள். காப்பியை குடித்ததும் [illegible] தத்தளித்துக்கொண்டு இருந்த அவன் உயிர் மறுபடியும் அவன் உடலில் வந்து நிலைத்தது போலிருந்தது. கோபு ஒன்

1-8-55 183193

லும் சொல்லத் தெரியாது முழித்தான். எதனுலோ துக்கம் தொண்டையை அடைக்க கண் கண்ணீரைக் கக்கியது. இதைப் பார்த்த சுரேஷ் கோபுவின் கைககளைப் பிடித்துக்கொண்டு.... கோபு என்னை மன்னிப்பாயா? நீ பெருமனுய் பூஷணிப் பழம்போல் இருப்பதால் ஓடமுடியாது நீ தவித்துக்கொண்டு நீ ஓடுவதைப் பார்க்க ஆசைப்பட்டேன்; இனி உன்னை ஒருபோதும் துன்பப் படுத்தமாட்டேன். இந்தா நீ கேட்ட புஸ்தகங்கள் என்று எடுத்து வந்து கொடுத்தான். புத்தகங்களை பார்த்த உடனே தன் களைப்பைக்கூட மறந்து சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்டான் கோபு.

இதைப் பார்த்த சுரேஷின் தாயார் பாவம். இவ்வளவு நல்ல பையனையா இப்படி பாடுபடுத்தினுய். உனக்கு மகாபாபம் தெரியுமா? இனி இப்படிச் செய்யக்கூடாது. பணம் அதிகம் வரவர குணம் உயரவேண்டுமே தவிர, கர்வம் கூடாது. நீ செய்த தப்புக்குக் கடவுளை ஸேவித்து மன்னிப்பு கேள் என்று திட்டி புத்திபுகட்டினுள். உடனே கோபுவை இழுத்து அணைத்துக்கொண்டு, கண்ணு! அறியாததனமாய் அவன் உன்னை ஹிம்ஸித்தான். வருத்தப்படாதே உனக்கு எது வேண்டுமானுலும் என்னைக் கேள் நான் தருகிறேன். சமர்த்தாய்ப் படிப்பா. உனக்கு எப்போ பசித்தாலும் வா; நான் ஏதாவது கொடுக்கிறேன் என்று அன்பாய் சொன்னுள். அன்புமொழியே கேட்டறியாத கோபுவின் முகம் ஆனந்தத்தால் பூரித்தது.

1955 ஆம்
நடைபெற்ற
குழந்தைகள் நாடக
விழாவில்

திருவல்லிக்கேணி மஹாத்மாஜி ஸேவா
சங்கத்தின் பாலிகா கழகத்தினரால்
நடிக்கப்பட்ட

கருணை உள்ளம்

மேனாட்டுத் தத்துவம்

இரண்டாம் பாகம்

பிளேட்டோவின் குடியரசு

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

பையன்களுக்கும் பெண்களுக்கும் ஒருவிதமான கல்விதான் அளிக்கப்படும். கல்வித்துறையில் சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் வேறுபாடில்லை. சங்கீதம், தேகப்பயிற்சி, போர்க்கலை இவை எல்லாம் பெண்களுக்கும் உரியவைதான். அரசியல் வட்டத்தில் சரிசமானமான இடம் அவர்கள் பெறுவார்கள். சில பெண்கள் ஞானிகளாய்த் திகழலாம்; வேறு சில பெண்கள் போர்க்கலை பயின்று போர் வீரர்களாய் விளங்கலாம்... ஆதலால் எந்தத் துறைகளிலும் பெண்களும் இறங்கலாம் என்பதுதான் பிளேட்டோவின் திருவுள்ளம்.

பெண்களும், குழந்தைகளும் நாட்டுக்குரியவர்கள். மணச் சடங்குகளை அரசாங்கந்தான் செய்து வைக்கும். நாட்டின் ஜனத்தொகையை ஒரே நிலையில் வைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அவர்கள் புரிவார்கள். மணங்கள் சீட்டுக்குலுக்குதல் மூலமாய்த்தான் நடக்கும் என்ற சட்டமிருந்தபோதிலும் அரசாங்கத்தார், எந்த இனங்களைச் சேர்த்தால் நாட்டிற்கு நன்மை ஏற்படுமோ, அந்த இனங்களைத்தான் சேர்த்து வைப்பார்கள்.

வெளிப்பார்வைக்குச் சீட்டுக் குலுக்கி நடப்பதுபோலத் தோன்றும்; ஆனால் எல்லாம் அரசாங்கம் செய்கின்ற சூழ்ச்சியேயாகும் என்று ரசல் கருதுகின்றார்.

பெண்கள் நாட்டிற்குப் பொது என்றால் கண்டவாறு அவர்கள்பால் உணர்ச்சியை—மிருக வேகத்தைத் தணித்துக் கொண்டார்கள் என்ற தவறான கருத்தை மனத்தில் வளர்த்து விடாதீர்கள்.

மணம் என்பதும், குழந்தைப்பேறு என்பதும் அரசாங்கத்தின் அலுவல்களேயாகும். குழந்தைகள் பிறந்ததும் அவைகள் அரசாங்கத்தின் பார்வைக்குப் போய்விடும். தகப்பன் தாய்மார்கள் இன்னாரென்று குழந்தைகள் உணர முடியாது. முதியோர்களை அவர்கள் தாயென்றும், தகப்பன் என்றும் அழைத்தார்கள். முதியோர்களை மட்டுமரியாதையின்றி அவர்கள் நடத்த மாட்டார்கள். ஏனெனில் ஒருவேளை அந்த முதியோர்களே அவர்களுடைய பெற்றோர்களாயிருக்கலாம்!

தகாத பெற்றோர்கள் அளித்த குழந்தைகள்—விகாரமான சேய்கள்—இவைகள் அந்நாட்டில் இடம் பெறா. இஸ்பார்ட்டாவில் செய்வதுபோல அவைகளைக் கொன்று விடுவார்கள். அரசாங்கம் ஆமோதிக்காத மணங்களில் பிறந்த குழந்தைகள் விபசாரத்தில் தோன்றிய குழந்தைகளாகும்.

இப்படிக் குழந்தைகளை வளர்ப்பதில் ஒரு லட்சியம் இல்லாமலில்லை. சுயநல உணர்ச்சியை வேரோடு மாய்க்கப் பிளேட்டோ ஓர் உபாயந் தேடினார் போலும்.

மேலும் நற்காரியத்திற்காக அரசாங்கம் மட்டும் பொய் சொல்லலாம் என்று பிளேட்டோ குறிக்கின்றார். ஆண்டவன் மக்களை மூன்று விதங்களாகப் பிரித்திருக்கிறார் என்ற கதையை அழகாய் நெய்து விட்டார்; இதுவும் ஒரு பொய்தானே! தங்கத்தாலான மக்கள், வெள்ளியினாலான மக்கள், பித்தளை அல்லது இரும்பிலான மக்கள்—என்று மக்களை மூன்று பிரிவுகளாய் வகுத்தார்.

தங்கத்தாலான மக்கள் நாட்டை ஆள்கின்ற ஞான வேந்தர்களாவர்; வெள்ளியினாலான மக்கள் போர் வீரர்களாய்த் திகழ்வார்கள்; பித்தளை இரும்பு இவைகளாலானவர்கள் ஊழியஞ் செய்ய வேண்டும்.

நாமும் மூன்று குணங்களைக் கண்டோம் : சத்வகுணம், ரஜோ குணம், தமோ குணம்—இக்குணங்களுக்கேற்றவாறு பிறவிகளும் அமையும் என்று வாதிக்கின்றோமல்லவா? குணத்தினாலும் கர்மத்தினாலும் ஒருவனுடைய நிலை ஏற்படுகிறது என்ற தத்துவம் நம்மிடத்தே வேரூன்றாமலில்லை.

நியாயத்திற்கு இலக்கணம் வகுக்கிறார் பிளேட்டோ. நியாயம் என்பது அவரவர் தம்தம் கருமம் செய்வதே என்று மொழிகின்றார். அரசாங்கத்தார் அவருக்கேற்பட்ட காரியங்களைச் செய்வது நியாயமாகும்; போர் வீரர்கள் போரில் ஈடுபட வேண்டும்; ஊழியஞ்செய்வோர்கள் ஊழியத்தொழிலில் இறங்க வேண்டும். குலத்திற்கேற்ற தொழிலைச் செய்வதே அறம்—நியாயமென்று—நாமும் கூறுகின்றோம். அந்தணர், க்ஷத்திரியர், வைசியர், நான்காம் வருணத்தார்—இவர்கள் குணத்திற்கேற்றவாறு, கருமத்திற்கேற்றவாறு தம்தம் தொழிலைச் செய்கின்றார் என்ற கருத்து நம்மிடம் வேரூன்றியிருக்கிறது.

பிளேட்டோ கொண்ட கருத்தை ரசல் அலசிப் பார்க்கின்றார். தகப்பன் செய்த தொழிலைப் பரம்பரையாய் அவன் பிள்ளைகள் செய்யலாம். ஆனால் பிளேட்டோ வகுத்த குடியரசில் தகப்பன் இன்னான் என்பது தெரியாதே என்று நகைச்சுவை எழ ரசல் நவில்கின்றார். மேலும் பிளேட்டோ போற்றுகிற கருத்திற்கு வேறொரு ஆதாரமிருக்கிறது. ஏதொரு சக்தி இஸ்கியூஸ் முதலிய தெய்வங்களையும் ஆட்டி வைக்கிற சக்தி.

ஒவ்வொருவனுக்கும் ஓர் இடத்தை ஒரு தொழிலை வகுத்துத் தந்திருக்கிறது. இந்த அறத்தை மீறினால் தண்டனை கிடைக்கும் என்ற தத்துவத்தில் முளைத்திருக்கும் பிளேட்டோவின் கருத்து என்று ரசல் அபிப்பிராயப் படுகின்றார்; இதில் உண்மை இல்லாமலில்லை.

ஒரு குறிப்பிட்ட சிறிய வட்டத்தில் பிளேட்டோவின் கொள்கை நிறைவேறக் கூடும். விரிந்து போய்க்கொண்டிருக்கும் பிரபஞ்சத்தில் இந்த வர்ணாச்சிரமத்திற்கு இடமிருக்குமா என்ற விஷயம் ஆராய்ச்சிக்குரியது. மேலும் பிளேட்டோவின் குடியரசில்

கலைகளுக்கு இடமில்லை. எல்லாம் சட்டதிட்டங்களுக்குள் சிக்குமானால் அறிவுவளர்ச்சிக்கு இடமில்லாமற் போகும். சுதந்தரத்தில் இன்பமில்லை; பாரதந்தரத்தில்தான் இன்பம் வேரூன்றி நிற்கும் என்பது உண்மையே.

ஆனால் நாம் தஞ்சமாய்ப்புகும் இடம் எல்லா நன்மையைத் தரக்கூடியதாயிருக்க வேண்டும். ஆண்டவனைத் தவிர மற்ற காமங்களை மாற்றுவதுதான் நல்லது. அதுதான் அறம்; அதுதான் நாம்புரியும் செயலாகும். நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற சுருதியில்தான் நம் உளம் உணரவேண்டும்; வாய்பேசவேண்டும்; உடல் நடக்கவேண்டும். அரசியல் அப்படித் தெய்வத் தன்மை வாய்ந்ததன்று.

மனிதன் வேறு, அரசியல் வேறு என்று நாம் பிரிக்கக்கூடாது. மனிதனின் விரிவுதான் அரசியல்; அரசியலின் குறுக்கந்தான் மனிதன் என்ற கருத்தை அடிப்படையாக வைத்தே இந்தக் குடியரசைப் பிளேட்டோ எழுப்பினார் போலும். பாசிக் கொள்கைக்கும், ஹெகல் கண்ட தத்துவத்திற்கும் பிளேட்டோ ஒரு விடிவெள்ளியென்று சொன்னால் அது மிகையாகாது.

நல்லது, கெடுதல்—இவை ஒன்றோடு ஒன்றை எதிர்க்கின்றன. ஆசாபாசமாம் அச்வங்கள் நம்வசமில்லாமற் போனால், ரதம் சின்னாபின்னமாய்ச் சிதறிப்போய்விடும் என்று பிளேட்டோ மனிதனுடைய ஆத்ம நிலையைச் சித்திரிக்கிறார். இதே சித்திரத்தைத் தான் நம்முடைய உபநிடதங்கள் அளிக்கின்றன. ஆசாபாசங்களுக்கு இடம் தந்தோமானால், நம் தூய நிலைகுலைந்து போகும். அதைப்போலவே ஒரு லட்சிய அரசியலும் அழிந்து போகும். இப்படி மாறி மாறிவரும் அரசியல் நிலையும். அரசாங்கத்தில் வேலைபார்ப்பதற்கு ஒருவனுக்குச் சொத்து சுதந்திரம் வேண்டும்.

இத்தகைய அரசாங்கத்திற்கு டைமாகரஸி (Timocracy) என்று பெயர். பிறகு சுயநலப் பணக்காரப் பிரபு அரசாட்சி அமுலுக்குவரும், இத்தகைய அரசாங்கத்திற்கு ஆலிகார்கி.(Oligarchy) என்ற பெயர் சூட்டப்படும். பிரபுக்களின் செல்வத்தைக் கண்டு அழுக்காறு கொள்ளும் ஏழை மக்கள் பதவிக்கு வந்து குடியரசை (Democracy) நாட்டலாம். பிறகு ஜனங்களின் பூசலுக்கிடையே கொடுங்கோல் (Tyranny) அரக்கன் தோன்றுவான்.

இப்படிப் படிப்படியாக எல்லாம் சீர் குலைந்து போய்விடும். அறிவுக்குத்தான் மனிதன் பணியவேண்டும். அறிவின் ஒளி மங்கினால், அறிவின் ஆற்றலை அகத்தே போர்புரிகின்ற கொடிய உணர்ச்சிகள் அழித்துவிட்டால்,மனிதன் நரகக் குழியில் விழுந்து உழல நேரிடும்.

பிளேட்டோவின் அரசியலில் ஞானி வேந்தர்களுக்குத்தான் இடமுண்டு. ஜனகன்போல அவர்கள் ஆளவேண்டும். முக்குணங்களின் கோளாறுகளுக்கேற்ப மனோநிலை மாறுவதுபோல, அரசியலும் மாறும் என்றது இதனால் தெரிகின்றது. அரசாங்கமென்பது மனிதன் விரிந்த நிலைதான் என்ற தத்துவத்தில் எழுந்தது பிளேட்டோவின் குடியரசு என்று ஐயமின்றி நாம்சாற்றலாம்.

ஆன்ம தத்துவம் (ஆன்மாவின் இயல்பு)

பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள்,
முன்னைத்தலைமைத் தமிழ் ஆசிரியை,
சென்னை லேடிவில்லிங்டன் உயர்தரக் கலாசாலை.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

மூலம்: 54. விஷம ச்ருஷ்டியும் கூடாது.

பொருள்: ஆன்மா ஒன்றேயானால், சில துன்பத்தை மட்டும், சில இன்பத்தை மட்டும், சில இன்ப துன்பங்களைக் கலந்தும் அனுபவிக்கும் முறையில், பொருள்களை வெவ்வேறுபட்ட இயல்புடையனவாய் ஈசுவரன் தோற்றுவித்தல் கூடாது. இவ்வேறுபாட்டிற்கு ஆன்ம பேதமும், கன்மத்தின் ஏற்றத்தாழ்வுமல்லவா காரணம்?

அவ: இங்ஙனம் யுக்தியால் பல விரோதங்களைக் காட்டினார் முன்; இவையேயல்லாமல் இதற்கு (ஏகாத்ம வாதத்திற்கு) வேத விரோதமும் உண்டு என்கிறார்:

மூலம்: 55. ஆத்மபேதம் சொல்லுகிற ச்ருதியோடும் விரோதிக்கும்.

பொருள்: ஆன்மா ஒன்று என்னில், ஆன்மாக்களுக்குள் பேதம் உண்டு எனச் சொல்லும் வேதவாக்கியத்தோடு மாறுபடும்.

விளக்கம்: வேதத்தில் ஓரிடத்தில் சீவாத்மா ஒன்று என்றும், மற்றோரிடத்தில் சீவாத்மா பல என்றும் சொல்லப்பட்டுள்ளன. ஆனால், ஆன்மா ஒன்று என்பதற்கு, ஜாதி ஒற்றுமையினால் ஆயிரக்கணக்கான நெல்லை இஃதொரு நெல் என்று ஒருமையாகச் சொல்லுவது போன்று, சாதி ஒற்றுமையினால் ஆன்மாக்களை ஒன்று என்று சொல்லுகிறது என்றும், உண்மையில் ஆன்மா பலவாயிருத்தலின், அதைப் பலவென்றே சொல்லுகிறதென்றும் இராமாநுஜர் பொருளுரைக்கிறார்.

அவ: அத்துவைதிகள் சொல்லும் பேதத்தைக் கண்டிக்கிறார்:

மூலம்: 56. ச்ருதி, ஔபாதிக பேதத்தைச் சொல்லுகிறதென்னவொண்ணாது.

பொருள்: வேதம் ஔபாதிக பேதத்தைக் கூறுகின்றதென்பது கூடாது.

விளக்கம்: ஔபாதிக பேதமாவது: ஆன்மா ஒன்றாயிருப்பினும் சரீரம் பலவாயிருக்கின்றமையின், அந்தந்தச் சரீர பேதத்தை இட்டு, அதற்கு (ஆன்மாவிற்கு)க் கூறும் பேதமாம்.

அவ: இங்ஙனம் சொல்லவொண்ணாமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார்:

மூலம்: 57. மோக்ஷ தசையிலும் பேதமுண்டாகையாலே.

பொருள்: மோட்ச நிலையிலும் ஆன்மாக்களுக்குள் வேறுபாடு இருத்தலின், இங்ஙனம் சொல்லுதற்கியலாது.

விளக்கம்: எல்லாத் துன்பங்களும் நீங்கிய முத்தி நிலையிலும் ஆன்மாக்களுக்குள் வேறுபாடு உண்டு என்பது வேதத்தின் முடிவு.

அவ: தேவர் உடல், மனிதர் உடல், காமக்குரோதம் என்பவைகள் அறவே அற்று, எல்லா ஆன்மாக்களும் ஒரே தன்மையுடையதாய், எக்காரணத்தாலும் பேதத்திற்கு வகையற்றதாயன்றோ மோட்ச நிலை இருப்பது. அங்கும் ஆன்மாக்களுக்கு வேறுபாடு ஏற்படுதல் யாங்ஙனம்? என்னும் வினாவையும், அதற்கு விடையையும் இரண்டு சூத்திரங்களால் கருபகிருர்.

மூலம்: 58. அப்போது தேவமநுஷ்யாதி பேதமும் காமக்குரோதாதி பேதமும் கழிந்து, ஆத்மாக்கள் ஸ்வரூபம் அத்யந்தம் ஸமமாய், ஒருபடியாலும் பேதம் சொல்லவொண்ணுத படி இருந்ததே யாகிலும்;

பொருள்: அவதாரிகையில் குறிப்பித்தவாறு, மோட்ச நிலையில் எல்லா வகையான வேறுபாடுகளும் நீங்கி, ஆன்ம சொரூபம் ஒருபடி பட்டதாய், எவ்வகையிலும் வேறுபாடு சொல்லக் கூடாததாய் இருந்ததேயாகிலும்;

மூலம்: 59. பரிமாணமும், எடையும், ஆகாரமுமொத்திருக்கிற பொற்குடங்கள், ரத்நனங்கள், வ்ரீஹிகள் தொடக்கமானவற்றுக்குப் பேதமுண்டாகிறுப்போலே ஸ்வரூப பேதமும் ஸித்தம்.

பொருள்: அளவும், நிறையும், வடிவமும் ஒத்திருக்கும் பொற்குடங்கள், இரத்தினங்கள், நெற்கள் முதலியவற்றிற்கு வேறுபாடு தோன்ற இடமில்லையே யாகிலும், அவற்றுள் பலவகைகள் காணப்படுதல் போன்று, ஒரு வகையாலும் வேறுபாடு சொல்ல இயலாத வண்ணம் ஒரே தன்மையுடையராயிருக்கும் முத்தான்மாக்களுக்குள்ளும் சொரூப பேதம் சித்திக்கும்.

அவ: இவ்வாதத்திற்கு முடிவுகட்டுகிருர்.

மூலம்: 60. ஆகையால் ஆத்மபேதம் கொள்ளவேணும்.

பொருள்: முற்கூறிய காரணங்களினுல், ஆன்மாக்களுக்குள் வேறுபாடு உண்டு எனக்கொள்ள வேண்டும் என்று முடிவு கட்டுகிருர்.

அவ: ஆன்மாவிற்கு முன் பல இலக்கணங்களைச் சொல்லியிருப்பினும், அவற்றுள் சில ஈசுவரனுக்கும் சில அசித்திற்கும் பொருந்தியிருத்தலின் அங்ஙனம் பொதுவாயிருக்குமவற்றை விட்டு, ஆனமாவிற்கே சிறப்பாகவுள்ள ஓர் இலக்கணத்தைச் சுருக்கமாக அருளிச்செய்கிருர்.

மூலம்: 61. இப்போது இவர்களுக்கு லக்ஷணம்—சேஷத்துவத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம்.

பொருள் :—பத்தர், முத்தர், நித்தியர் ஆகிய மூவகைப்பட்ட ஆன்மாக்களுக்கும் சிறப்பிலக்கணம் சேஷத்துவத்தோடுங்கூடிய ஞானத்துவம்.

விளக்கம் :— ஆன்மாவிற்கு ஞானத்தை மட்டும் சிறப்புடைமையாகச் சொல்லில், ஞானம் ஈசுவரனுக்கும் உண்டன்றோ? அன்றிச் சேஷத்துவத்தைமட்டும் சொல்லின் இஃது அசித்திற்கும் உண்டன்றோ? வேறொன்றிற்கும் அமையாத ஒன்றுதானே ஒன்றிற்குச் சிறப்புடைமை எனப்படுவது. ஆதலின், ஈசுவரனுக்கில்லாத சேஷத்துவமும், அசித்திற்கில்லாத ஞானமும் சேர்ந்து ஆன்மாவிற்கு இலக்கணமாக அமைந்திருத்தலின் இதையே ஆன்மாவிற்குச் சிறப்பாகிய தன்மை என்கிறார்.

சேஷத்துவத்தோடுங்கூடிய ஞாத்ருத்வம் என்றாலும், ஞாத்ருத்துவத்தோடுங்கூடிய சேஷத்துவம் என்றாலும் பொருள் ஒன்றே. ஆயினும், பிள்ளைலோகாசாரியர், சேஷத்துவத்திற்கே ஊற்றந்தர வேண்டும் என்னும் கருத்துடையராதலின், இதற்கு முதலிடம் தந்து கூறுகிறார். சேஷத்துவந்தான் ஆன்மாவைச் சத்துப் பெறச் செய்கிறது என்பது ஆசாரியர் கருத்து.

அவ :—இங்ஙனம் ஆன்மாவிற்கும், ஆன்மாவினுடைய ஞானத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அருளிச்செய்கிறார்:

மூலம் : 62. இவர்களுடைய ஜ்ஞாநம்தான்—ஸ்வரூபம்போலே நித்யத்ரவ்யமாய், அஜடமாய், ஆநந்தரூபமாயிருக்கும்.

பொருள் :—சேதனருடைய ஞானமானது, ஆன்மாவைப் போன்றே என்றுமுள்ளதாய், திரவியமாய், தானே தோற்றிக் கொண்டிருக்கும் பொருளாய் ஆனந்தமாய் இருக்கும்.

(தொடரும்)

பக்தன் அணா 6.

மலர் 5. இதழ் 4. மன்மத ஆடி மீ. ஜூலை—ஆகஸ்ட்' 55

பொருளடக்கம்

	பக்கம்		பக்கம்
சிக்கதேவராஜ விண்ணப்பம்	263	வால்மீகியும் கம்பரும்	292
அமலனாதிபிரான்	269	நாட்டின் ருதுகால விசேஷங்கள்	296
அலங்கார சுலோகம்	278	ஸ்ரீராம சிருஷ்டி	304
ஸ்ரீ சங்கர விஜயம்	282	சந்திரகலாமாலை	311
கௌஸல்யா ஸம்பிரஜாராய	287	அருளாளனுக்கு அஞ்சலி	317

காரியாலயம்—71, வெங்கடரங்கம் பிள்ளைத் தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை-5. (போன் 86109)

16

மர்மத்தின்மேல் மர்மம்.

இன்ஸ்பெக்டரின் தோற்றத்தைப் பார்த்தவுடனே பவானிக்குத் திக்கென்று தூக்கிவாரிப்போட்டது. அவருடைய கண்களில் தீப்பொறி பறப்பது போன்ற தீட்சிண்யமும் முகத்தின் கடுகடுப்பும் அவளுடைய வேதனையைப் பின்னும் கிளறுவதுபோலிருந்தது. சற்று முன்புதான் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து சென்றார். இப்போது இன்னொருவர் வந்திருக்கிறாரே, இதென்ன மர்மமோ தெரியவில்லையே! மரத்தின் மீதுள்ள குரலின் ரகஸியமும் தெரியவில்லை; சோதனை என்றால் இப்படி ஒன்றன்மீதொன்றாகவா வரவேணும். திடீரென்று இவர் எதற்குவந்தார்? என்ன ரகளை நடந்துவிடுமோ? என்ற அதிர்ச்சியினால் தத்தளித்து நிற்கும் பவானி, முகத்தில் ச்ரமப்பட்டுக்கொண்டு தைரியத்தையும், துணிச்சலையும் வரவழைத்துக்கொண்டு வீராங்கனையைப்போல் நின்றாள். அவளுடைய இதயக் கடலில் சிந்தனை அலைகள் சுழன்று சுழன்று எழுந்து டபார் டபார் என்று உடைகின்றன. மரத்தின் மீதே நினைவு பூராவும் பாய்ந்து வட்டமிடுகிறது.

இந்நிலைமையில் வீடேறி வந்து நிற்கும் இன்ஸ்பெக்டரை விசாரிக்காமலிருந்தால் அதுவேறு சந்தேகத்திற்கு இடமாகிவிடுமே என்கிற எண்ணத்துடன்....என்ன சமாச்சாரம். சற்று முன்புதான் ஒருவர் வந்தார். இப்போது நீங்கள் வந்தீர்கள். அடுத்த நிமிஷம் வேறு யாராவது வருவார்களா? இத்தகைய வருகைக்குக் காரணம் என்ன என்பதே தெரியவில்லை..... என்று தானே முன்கூட்டிச் சொல்லிய பவானியை நோக்கி,வந்த இன்ஸ்பெக்டர் ஒருமாதிரியாய் ஏளனம் த்வனிக்கும் குரலில் பேசத் தொடங்கி.... 'மணிக்கு ஒருதரம் வந்து காவல் போடுகிறது என்கிற ச்ரமத்தை எங்கள் அதிகாரிகள் எங்களுக்கு வைக்கவில்லை. இந்த வீட்டைச் சுற்றிக் காவலிருப்பதாகவே உத்திரவு போட்டனுப்பி இருப்பதால் நாங்கள் வீட்டைச் சோதனை போடவும் இங்கேயே காவலிருக்கவும் வந்திருக்கிறோம்' என்றதைக்கேட்டதும் பூபதியைத் தூக்கி வாரிப்போட்டது.

பவானி தலையில் செம்மட்டியாலடிப்பதுபோன்ற அதிர்ச்சி உண்டாகி வதைக்கிறது; எனினும் அதை மிக ச்ரமப்பட்டுச் சமாளித்துக்கொண்டு, ஸார்! மிக்க சந்தோஷம்; அடிக்கடிவந்து அர்த்தமற்ற விஷயங்களைக் கேள்வி கேட்டு வீணன கலவரத்தைஉண்டாக்குவதைவிட தாங்கள் சவுகரியமாக இங்கேயே முகாம்போடலாம், இதோ வீட்டிலுள்ளப் பூட்டுச் சாவிகள், சகலத்தையும் திறந்து தாராளமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்; என்று முன்பு சாவியை அந்தஇன்ஸ்பெக்டரிடம் வீசி எறிந்ததுபோல் இப்போதும் எறிந்துவிட்டுக் குழந்தை மீராவுடன் தான் விலகுகின்ருள்.

பூபதிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரே அதிர்ச்சியும் கலவரமும் அடைந்து விழிப்பதைக் கண்ட பவானிக்கு இவருடைய தடமாட்டத்தில் என்ன சொல்லிவிடுவாரோ! என்கிற எண்ணத்தினல் அப்பா! அவர்களைப் போய்ப் பார்க்கச்சொல்லுங்கள்; மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்; எழுந்திருங்களப்பா என்று சற்று கனத்த குரலில் அதிகாரம் செய்வதுபோல் கூப்பிட்டாள்.

உண்மையில் பூபதிக்குத் தலை சுற்றுகிறது; மயக்கமே போட்டுவிடும் போலான நிலைமையுண்டாகிவிட்டதால் தலையை கெட்டியாகப்பிடித்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டார்; தான் பதில் சொல்லாவிடில் வந்துள்ள மனிதன் என்ன நினைப்பாரோ என்பதனல்.... அம்மா! பவானீ! என் சட்டை ஜேபி உள்பட எதை வேண்டுமானலும் பார்த்துக்கொள்ளட்டும்; எனக்கென்னவோ இதைப்பற்றி எத்தகைய தகவலும் தெரியாது; உனக்குமப்படியே!யார் யார் தலைவிதி எப்படியோ!அப்படியல்லவா சகலமும் நடக்கும்; என் மனவேதனையில் நான் இப்போதே இறந்துவிடுவேன்போல் இருக்கிறது; அப்படி போய்விட்டாலும் ஒரு நிம்மதியாவது உண்டாகிவிடும்; என்று மிக்க சலிப்புடன் கூறினரே யன்றி எழுந்திருக்கவில்லை.

பவானிக்கோ தோட்டத்திலுள்ள மரத்தின் மீதே நினைவு கொந்தளிக்கின்றது; யார் போய் அங்கு பார்த்துவிடுவார்களோ! என்ன நடக்குமோ! ஒருவேளை அவர் தான் இங்கு ஒளிந்திருந்தால் அதோகதி யாகிவிடுமே என்ற பெருங்குழப்பத்துடன் வாசல் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்ஸ்பெக்டர் வீடுபூராவும் தேடினர்; ஒரு பரணையைக் கூட விடவல்லை; பீரோக்கள், பெட்டிகள் சகலமும் திறந்து

பார்த்து அதற்குள் ஆள்ஒளிந்திருப்பானோ என்றுதுளாவி விட்டார். பெரிய பெரிய அண்டா! அடுக்கு ஜோடுத்ததலை முதல் கவிழ்ந்திருப்பதை நிமிர்த்திப் பார்த்தார். எங்கும் ஆள் பதுங்கி இருப்பது தெரியவில்லை; பெரிய ஏமாற்றமே அடைந்து, பவானியின் முன்புவந்து, "அம்மணீ எங்களுடைய கடமை! நாங்கள் கேட்கிறோம்; தயவுசெய்து கோபிக்காமல் பதில் சொல்லவேண்டும்; அதாவது அந்த மனிதனைப் பற்றிய சகல தகவல்களும் உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்பது எங்களுக்குப் புலனாகிவிட்டது. அவைகளை மறைத்து வைப்பதனால்....

என்பதற்குள், பவானி மிக்க ஆத்திரத்துடன், ஐயா! போதும் உங்கள் விளக்கம்; அவைகளை மறைத்து வைப்பதனால் எனக்கே விபரீதமாகமுடியும் என்றுதானே சொல்ல வந்தீர்கள்; இப்போது நேர்ந்துள்ள விபரீதத்தைவிட வேறு விபரீதம் ஒன்று இருப்பதாகவே நான் நினைக்கவில்லை; எனக்கு உண்மையில் எதுவுமே தெரியாது என்பதைத் தவிர என்னிடம் நீங்கள் எதையுமே எதிர்பார்க்க முடியாது. என்னைத் தூக்கிலிட்டாலும் சரி; அதற்கும் மேல் ஏதாவதொரு தண்டனை இருந்து அதைக்கொடுத்தாலும் சரி; நான் ஏற்றுச் சந்தோஷமாய் அனுபவிக்கத் தயாராயிருக்கிறேன். வீணாக என்னை உபத்திரவப்படுத்த வேண்டாம்; என் மனம் துடிக்கும் துடிப்பை உங்கள் போன்ற உத்யோகமோகத்தில் மூழ்கி உள்ளவர்களாலறிய முடியாது; என்னை என்னவேண்டுமாயினும் தாராளமாகச் செய்துகொள்ளுங்கள்; ஆனால் ஒன்று; உலகமறியாத இந்தப் பச்சைக் குழந்தையைமட்டும் ஒன்றும் செய்து விடாதீர்கள்; அதனிடத்திலாவது சிறிது தயவு காட்டி அதைக் தக்க இடத்தில் சேர்க்கும் வரையில் என்னுடன் கூடவேவந்து உபகாரம் செய்யுங்கள்; அதொன்றுதான் நான் கேட்டுக்கொள்வதாகும். என்று படபடத்துக் கூறும் போது கண்களில் நீர் மடைதிறந்ததுபோல் பொங்கி வழிய ஆரம்பித்தது.

இன்ஸ்பெக்டருக்கு என்ன பதில் கூறுவதென்றே தோன்றாமல் சிறிதுநேரம் திகைத்துப் போய்விட்டார். பிறகு சற்று சமாளித்துக்கொண்டு, அம்மணீ! போலீஸ்காரர்கள் என்றாலே கல் நெஞ்சர்கள் என்று எண்ணிவிட வேண்டாம்; அவர்களுக்கும் இளநெஞ்சம் உண்டு; ஈரச் சொற்களும் உண்டு. அவரவர்கள் கடமையில் கண்ணாயிருப்பது என்கிற முறையில் உறுதியாக இருந்தே தீர வேண்டுமல்லவா!

அதற்கு நிதர்சனம் தற்சமயம் உங்களேயே எடுத்துக்கொள்ளலாமே; உத்தம பத்தினி—கணவனே சகலமும் என்கிற மனே உறுதியில் தாங்கள் இந்தக் கலிகாலத்தில்கூட உங்கள் ப்ரதிக்ஞையை மாற்ருமல் வைராக்ய உறுதியுடன் பேசவில்லையா! அதுபோலத்தான் எங்கள் கடமையும் என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் பவானியையே சுட்டிக் காட்டிப் பேசியதைக்கேட்ட பவானிக்கு இன்ஸ்பெக்டர்மீது கோபம் வராமல் அவருடைய பேச்சுத் திறமையைக் கேட்டு சிறிது வியப்பே ஏற்பட்டது; எனினும் அதைக் காட்டிக்கொள்ளாமல், ஸார்! சாதுர்ய வார்த்தைகளுக்கும் சாம்யம் காட்டிப் பேசுவதற்கும் இந்த சமயம் சரியல்ல; என்னுடைய இதயம் அளிந்த புண்ணுகி இருக்கிறதை விண்டுகாட்ட முடியாது.

என் கணவரை மாலேயிட்டதன் பலன் கவலேக் கவசத்தை அன்று முதல் இன்றுவரை நான் அணிந்துவிட்டதுதான் நான் அடையும் சந்தோஷமாகும். அத்தனேக் கும்பிருட்டிலும் ஒரு மின்னல்தோன்றி மகிழ்விப்பதுபோல் என் கண்மணி மீரா ஒரு ஜீவன்தான் என் வாழ்க்கையின் தீபமாகும்; அவருடைய எத்தகைய விஷயமும் அறியாதவர்களிடம் திரும்பத்திரும்பக் கேட்டால் கோபம் வராமல் என்ன செய்யமுடியும்? உலகத்தவர்களேப் போல் நானும் கல்யாணமாகிய நாள் முதல் அவரிடம் ஒரு வினுடியாவது சந்தோஷமாய் ஆனந்தமாய்ப் பேசிக் களிக்க நான் தவித்த தவிப்பும் பட்ட ஆசையும் அது நிறைவேருத சூன்யமாகிவிட்ட கொடுமையும் பகவானுக்கு வெளிச்சமேயன்றி மனிதர்களின் மனத்தில் படவே படாது.

என்னுடைய நிராசையின் எதிரொலி என் வாழ்வை அம்மட்டுடன் நிறுத்தாமல் பயங்கரப் படுகுழியிலும் தள்ளி வதைக்கப்போகிறதை யறிந்தபோது எனக்கு எப்படி ஸார் இருக்கும்? நீங்களே சொல்லுங்கள். அவர் என்னை எத்தகைய சிறுமைப்படுத்தியபோதிலும் அவருடைய இதயம் பரிசுத்தமானது நிரபராதி. அவர்மீது வீணை குற்றங் குறைகளே நினேக்காதே என்று என் மனச்சாட்சியொன்று ப்ரதிதினமும் சொல்லிச் சொல்லி என்னைத் தேற்றுவதால் அவருடைய முகத்தை என்ருவது ஒருதினங் கண்டாலும் நான் சந்தோஷமே அடைந்து கடமையில் கண்ணுக இருப்பேன்.

இத்தகையம் நிலேயைப் பிறர் யாரறிய முடியும். என் பிதா என்னைப் பணத்திற்காகக் கொண்டு

கொடுத்தார். அதை அவரெதிரிலேயே சொல்கிறேன். பணத்திற்குப் பணமுமில்லை. வாழ்க்கையில் மணமும் இல்லை. காகிதப் புஷ்பத்தைப்போலாகிவிட்டது. நீங்கள் இவைகளை நம்பினால் நம்புங்கள். நம்பாவிட்டால் உங்கள் சட்டப்படி என்ன செய்யவேண்டுமோ செய்யுங்கள் என்று படபடத்துக் கூறினாள்.

அதே சமயம் பவானியின் தாயார் முதலியவர்கள் ஊரி லிருந்து வந்து இறங்கினார்கள். வரும்போதே போலீஸை யும் உள்ள நிலைமையையும் கண்டு இடிஇடித்ததுபோல் துள்ளி ஐயையோ! இதென்ன விஷயம் பவானீ! ஏதோ பயங்கரமான விஷயத்தைப் பத்திரிகையில் படித்துவிட்டு நான் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்தேன் . முருகப்பன் கைதியானான். தப்பி ஓடினான் என்று பத்திரிகையில் இருந்ததே. முன்னுவுள்ள குடிப்பெயர் வேறாக இருப் பதைக் கண்டு சந்தேகித்தேன். இருப்பினும் பயமும் கலக்கமும் கொண்டு ஓடிவந்தேன். இதென்ன விஷயம் என்று கண்ணீர் பெருகக் கேட்டாள்.

பவானி சளைக்காமல்....அம்மா! அம்மா பத்திரிகையில் தப்பிதமாக வந்திருப்பதன் பலன் ஊர் பூராவும் ஒரே நாளில் தெரியாமல் காப்பாற்றவே கடவுள் அத்தகைய நிலைமை உண்டாக்கினார்போலும். அவரேதான் கைதி யானாராம், தப்பித்து விட்டாராம், அவரைக் கண்டு பிடிக்கவே இங்கு இவர்கள் வந்திருக்கிறார்கள். சோதனைப் படலம் நமக்கு என்றே ஆரம்பித்தாயிற்று. இவர்கள் வீட்டைச் சோதனை போடும் படலம் முடிந்தது. இன்னும் என்னென்ன நடக்கிறதோ நடக்கட்டும் என்று தைரிய மாகவே கூறினாள்.

இன்ஸ்பெக்டர் மிக்க தர்மசங்கடமான நிலைமையில் குழம்பியவாறு அப்படியும் இப்படியும் உலாவினார். தன் ஆட்களிடம் இங்கேயே காவல் செய்யும்படிக் கூறிவிட்டுத் தான் மட்டும் போய்விட்டார். வாசலில் இரண்டு பேர்கள் உள் பின்புறம் ஒருவன் காவல் அமர்ந்திருப்பதைக் காணவே சகிக்காத பவானி உள்ளுக்குள் துடிக்கிறாள்.

வாசல் மரத்திலுள்ளது யாரோ தெரியவில்லையே. இந்த மர்மத்தை யறிவதற்குள் இத்தனை கலவரங்கள் உண்டாக வேணுமா; கடவுளே! அவர் என் கணவராக இருப்பாரா; அல்லது அவருடைய எதிரிகள் யாராவதிருப் பார்களா; அல்லது கள்ளனே புகுந்திருப்பானா; அப்படி யானால் மெல்லிய குரலில் பவானி என்று ஏன் கூப்பிட

வேணும். இந்தச் சோதனையை எப்படி ஜயிப்பது. வாசலிலோ யமகிங்கரர்கள்போல் இருவர் உட்கார்ந்திருக்கிறார்களே. இன்னும் பொழுது போகப் போக என்னவாகுமோ தெரியவில்லையே! கடவுளே! இப்படி எல்லாம் ஆட்டி வைத்து வேடிக்கை பார்ப்பதா உனக்குப் பிரியம். இத்தகைய உன்னையா கருணைசமுத்திரம், கருணைமூர்த்தி என்றெல்லாம் சொல்கிறார்கள் என்று இடிந்து போய்த் தவிக்கின்றாள்.

போலீஸ்காரர்கள் வீட்டைவிட்டு நகரவே இல்லை. ஆனால் பொழுது என்னவோ தன் கடமைப் பிரகாரம் சாய்ந்துகொண்டே செல்கிறது. மீராவைத் தூங்க வைத்துவிட்டு பவானி புறக்கடைப்பக்கம் சென்றாள். அங்கும் பீமஸேனன்போல் ஒருவன் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் அவளுக்கு எங்குமில்லாத ஆத்திரமும் அழுகையுந்தான் வந்தது.

அங்கு குத்துக்கல்போல் நிற்கும் மனிதனைப் பார்த்து, நீங்கள் வெகு நேரமாகக் காவல் புரிகிறீர்கள். பசிக்கோ, தாகத்திற்கோ ஏதாவதொரு பானத்தைக் கொடுக்கலாம் என்றால் அதுகூட எங்கே குற்றமாகிவிடுமோ என்று பயப்படுகிறேன். ஆக்ஷேபணை இல்லை என்றால் ஏதாவது கொஞ்சம் சாப்பிடுங்கள் என்று தன் கோபத்தை அடக்கிக்கொண்டு சொன்னாள்.

அவன் மரியாதையாகவே பேசத் தொடங்கி, அம்மணி! எங்களுக்கு ஒன்றும் வேண்டாம். எங்கள் தலைவிதி நாங்கள் காவல் செய்கிறோம். அந்த மனிதன் ஜெயிலிலிருந்து எப்படித்தான் தப்பினானோ! படுபாவி. அவன் செய்கிற வேலையிலே எங்க உசிரு போவுது. தாயே! நீங்க நம்பினா நம்புங்க. நம்பாவிட்டால் போங்கள். இந்த மாதிரி உத்யோகம் எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவே இல்லை. வீட்டில் என் மனைவி நான்கு நாளாகக் காயலாய்க் கிடக்கிறாள். அவளுக்குப் பக்கத்திலிருந்து ஏன் என்று கேட்க முடியாமல் இப்படி உட்கார்ந்திருப்பது எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா? என்னுடைய உசிரெல்லாம் அவள்தானேம்மா! என்று அவன் அன்பு வழிய சொல்வதைக் கேட்கும்போது பவானியின் இதயத்தில் ஏக்கத்தின் எதிரொலிபோல் ஒரு பெருமூச்சு வந்து ஓய்ந்தது, மனைவியிடத்தில் இத்தகைய அன்பை என் கணவர் என்றாவது வைத்திருந்து நான் கனவில்கூட கண்டதில்லையல்லவா என்ற எண்ணம் புயல்போலடித்தது.

உம் பாவம்! மனைவியின்மீது உயிராக இருக்கும் இவனுக்கு அதன் அருமை தெரியும். என் கணவரைப்போல் அன்பற்றுத் திரிகிறவர்களுக்கு இந்த அருமை எப்படித் தெரியும்? என் விதி இது! என்று எண்ணமிட்டவளாய், சில விநாடிகள் பதுமைபோல் நின்றாள். அவள் நின்ற இடத்திற்கு எதிரில் கிணறு இருப்பதை ஒருமுறை பார்த்தாள். இத்தனைதூரம் நம் விதி சந்தி சிரிக்கும்படி ஆகிவிட்டபிறகு நாம் ஏன் உயிர் வாழ வேண்டும்? இன்னும் என்னென்ன பயங்கரங்களைக் காண நேருமோ! ஏன்? இந்தக் கிணற்றில் விழுந்து உயிரை விட்டால்தான் என்ன. என் பெற்றோருக்கு வேண்டியது பணந்தானே. அதை அவர்களுக்குக் கொடுத்தாகிவிட்டது. இந்தப் பத்தாயிரம் ரூபாயை அவர் எங்கு திருடினாரோ! எப்படி வந்ததோ! அது விஷயமாக வேறு பயங்கரங்கள் என்னென்ன வருமோ! என்று தனக்குத்தானே ஒரு முடிவு கட்டிக்கொண்டாள்.

தான் பேசாதிருந்தால் அவன் என்ன நினைப்பானோ என்றதனால் சமாளித்துக்கொண்டு....ஏம்பா! காயலாகக் கிடக்கும் உன் மனைவிக்கு யார் துணை இருக்கிறார்கள்? எத்தனை நாளாக ஜுரம்? என்று அங்கலாய்ப்புடன் கேட்டாள்.

சேவகன்:—துணையா தாயே! ஆண்டவன்தான் துணை இருக்க வேண்டும். அக்கம்பக்கம் குடி இருக்கிறவர்கள் யாராவது எட்டிப் பார்ப்பார்கள். நான் ஒன்றிற்கும் உதவாத கட்டையாய்க் கிடக்கிறேன். எனக்குள்ள வருத்தத்தில் லீவு போட்டு விடலாமா என்று நினைப்பதற்குள் ஆள் வந்துவிட்டது. என்ன செய்வேன்; என் விதி. நீங்க உள்ளே போங்க தாயே! நான் உங்களோடு பேசுவதுகூட குற்றமாகிவிடும்.

பவானி:—(கிணற்றருகில் வந்து சாய்ந்துகொண்டு நின்றபடி)....ஏம்பா! ஒரு பாபமும் அறியாத என்னிடம் பேசுவதா குற்றம்? பேஷ்! சட்டம் வெகு நன்றாக இருக்கிறது. இதோ பாரப்பா! உன்னை நான் என் உடன்பிறந்த சகோதரன் போல் எண்ணிக் கேட்கிறேன். தயவுசெய்து எனக்குப் பதில் சொல்ல வேணும். இந்த வழக்கைப்பற்றிய எந்தத் தகவலும் எனக்குக் கடுகளவுகூடத் தெரியாது. என் கணவரோ என்றுமே சரியாக வீட்டிற்கு வந்ததில்லை. அப்படித்தான் எங்கோ சென்றிருப்பதாக நான் எண்ணினேன். என்னுடைய விதியை எண்ணி நான் இருக்கையில் திடீரென்று மலையே என்மீது புரண்டதுபோல அவர்

கைதியாகிவிட்டார் என்கிற செய்தியும், தப்பி ஓடிவிட்டார் என்கிற பயங்கரமும் நீங்கள் வந்து கேள்விகள் கேட்பதும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதென்ன கேஸ்? யாரை யார் என்ன செய்தார்கள்? இவர் தலைமீது விடிந்த விஷய மென்ன? தயவுசெய்து எனக்குச் சொல்லவேண்டும் என்று தாழ்மையான குரலில் கெஞ்சிக் கேட்டாள்.

அப்போது இருள் சூழ்ந்துவிட்டது. அம்மணீ! எந்தப் புத்தில் எந்தப் பாம்பு இருக்கிறது என்பதை யாராலும் அறிய முடியாது. உங்கள் கணவரைப்பற்றி அடிக்கடி புகார்கள் மட்டும் வருவதுண்டு. சமீபத்தில் நடந்த ஒரு நாடகத்தன்று பெண் வேடம் தரித்தவன் முதலாளியின் வைப்பாட்டியினுடைய நல்ல விலை உயர்ந்த நகைகளைப் போட்டுக்கொண்டு வெகு ஷோக்காக நடித்தான். அன்று அந்தக் கதையில் கதாநாயகி கட்டிலில் தூங்கிக் கொண்டிருப்பவளைத் திருடன் தூக்கிக்கொண்டு போய் விடும் கட்டத்தில் எல்லா விளக்குகளும் அணைந்து விடுவது போல் பாவம்! இரண்டொரு மண்டை விளக்கை அணைப்பது போல் துணியால் மூடிவிட்டு ஸீனை நடத்தினார்களாம். அதே சமயம் சிலவிஷமிகள் நிஜமாகவே கொட்டகையின் உள் பாகமிருக்கும் எல்லா விளக்குகளையும் முன் எச்சரிக்கையாக அணைத்துவிட்டு வேஷக்காரனைத் தூக்கிக்கொண்டு எப் படியோ வெளியே ஓடிப்போய் விட்டார்களாம்.

அதே சமயம் முதலாளியின் வைப்பாட்டியின் வீட்டில் அவளைக் கொலை செய்திருந்த தகவலும் கிடைத்தது. உடனே நாங்கள் போய் சோதனை போட்டுப் பார்க்கையில் ஒரு கைக்குட்டையும் ஒரு கடிதமும் தவறிப் போய்க் கிடந் தது எங்களிடம் கிடைத்துவிட்டது. அதைப் பார்க்கையில் முருகப்பனுக்கு யாரோ எழுதிய கடிதம். அதில் விஷயம் ஒன்றும் புரியவில்லை. விலாசத்தினால் அவன்தான் இங்கு வந்து கொலைசெய்திருக்கவேணும் என்று நன்றாகப் புரிந்துகொண்டதோடு கைக்குட்டையின் வண்ணான் குறிப்பு மார்க்கின்மூலமும் முருகப்பன் என்பதைத் தெரிந்துகொண்டு நேரே வீட்டில்வந்து விசாரிக்கையில் அவர் இல்லை என்று தெரிந்தது. உடனே துப்பறியும் ஜம்புலிங்கம் வெகுப்ரயாஸைப்பட்டு அவர்களைக் கண்டு பிடித்துவிட்டார். அப்படி அகப்பட்டவன் எப்படி தப்பி விட்டான் பாருங்கள். அவனுடைய விதிதான் இப்படி எங்களைப் பிடித்தாட்டுகிறது. என்பதைக் கேட்கும் பவானியின் வயிற்றில் சங்கடம் செய்வதை அவளால் சகிக் கவே முடியவில்லை. மார்பு படபடவென்று அடிக்கிறது.

பவானி:—ஏம்பா! எனக்கு இந்த அதிர்ச்சியான விஷயத்தை நம்பவே முடியவில்லையே!அவர் அங்குவந்து கொலை செய்திருப்பார் என்று நீங்கள் நம்புகிறீர்களா!...என்று முடிப்பதற்குள், அவன் கடகடவென்று நகைத்தவாறு, அம்மணி! உங்களுடைய பதிபக்தி இருக்கிறது பாருங்கோ! அதனுல் நம்பமுடியாதபடி திரையிட்டு மறைக்கிறது. அவன் ஜேபியிலிருந்து கைகுட்டையும் கடிதமும் யாருடனே சண்டை போட்டிருக்கிறபோது விழுந்திருக்கவேணும் என்று தோன்றுகிறது. தவிர, நோட்டுக்களும் ஒருவருக்கொருவர் பிடித்திழுத்துக் கிழித்த நோட்டும் ஒரு மூலையிலிருந்தது. ஏனம்மா அதிகம் வளர்த்தவேணும்? பலவித ஆதாரங்களில் அவர் அகப்பட்டுக்கொண்டுவிட்டார். இப்போது ஓடிவிட்ட குற்றமும்சேர்ந்துவிட்டதால் மனிதன் பாடு கேட்கவே வேண்டாம்! என்று சொல்லும்போது பத்தாயிரம் ரூபாய் கத்தையாக இருந்ததே அது ஒருவேளை இங்கு திருடியதாக இருக்குமா? என்ற பெரிய கலவரமும் குழப்பமும் பவானிக்கு உண்டாகியதால் கதிகலங்கி நின்ற சமயம் சேவகன் எச்சிலைத் துப்புவதற்குப் புறக்கடை ஓரமுள்ள கதவருகில் சென்றுன். அச்சமயம், பவானீ.... பவானீ!) என்கிற குரல் மெல்லியதாக எங்கிருந்தோ கேட்பதை அறிந்த அவளை அப்படியே நெருப்பில் தூக்கிப் போட்டு விட்டதுபோன்ற ஒரு அதிர்ச்சியும் நடுக்கலும் உண்டாகித் தத்தளித்துவிட்டாள்.

நாற்புறமும் சுற்றிச் சுற்றிப் பார்க்கிருள். அங்கும் நிறைய மரங்களிருக்கிறது ஒட்டுத் தாவாரங்கள் மாட்டுக் கொட்டகைகள் எல்லாம் இருக்கிறது. அவைகளை எல்லாம் மிரண்டு மிரண்டு பார்த்தபடி தவிக்கும் சமயம் சேவகன் வந்துவிட்டான். இதென்ன ப்ரமையாக இருக்குமா! வாசல் மரத்தில் கேட்ட குரல் எது? இங்குக் கேட்ட குரல் எது ? ஒன்றுமே புரியவில்லையே ? நான் நினைக்கிறபடி அவராக இருக்குமாயின் இரண்டு இடங்களில் எப்படிக் குரல் கொடுக்க முடியும்? இதென்ன பேயா பிசாசா! ஒன்றுமே புரியாத வேடிக்கையாக இருக்கிறதே! என்ன செய்வேன் என்று தத்தளிக்கும்போது சேவகன்ஐயோ! பாழும்இரவுவந்துவிட்டதே....என்மனைவி எப்படி இருக்கிருளோ! என்ன தவிக்கிருளோ! என்று தன் போக்காக மனமுருகிச் சொல்வதைக் கேட்டு பவானியின் நிலை இருதலைக்கொள்ளி எறும்பு போலாகி விட்டது.

ஆநந்தா ஆஸ்பத்திரி என்றாலே வெறுப்பவள். அதைப் பார்ப்பதற்கே அவளுக்குப் பிடிக்காது. உயிரைக் கொடுக்கும் சஞ்சீவியும் உயிரை உறிஞ்சும் எமலோகமும் ஒன்றாக உள்ள ஆஸ்பத்திரியை ஆநந்தா வெகு நன்றாக அறிந்தவள். விதிவசமாக அவள் தன் தாயார் கடுமையாகப் படுத்திருந்த சமயம் அந்த சொர்க்க, நரக உலகத்தில் இருந்து அனுபவித்திருப்பதால் எத்தகைய விஷயத்திற்கும் ஆஸ்பத்ரிக்கே போகக்கூடாது என்கிற ஒரு தீவிரமான எண்ணம் உண்டாகி வேரூன்றியிருந்ததால் அந்தஇடத்தில் நிற்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. அதோடு திருடன்... சண்டை....ஓடிவிட்டார்கள்....அடிதடி....கொலை....என்கிற பயங்கரமான வார்த்தைகளைக் கேட்டதும் இன்னும் பயம் அபாரமாக பாதிக்கிறது. சின்னஞ்சிறு பையன் இவன் எதற்காக இந்தச் சங்கடங்களில் தலைஇடவேணும்? இதை விட்டுப் போவது எப்படி? என்ற குழப்பத்துடன் டாக்டரிடம் கேட்டதற்கு டாக்டர் சொல்லிவிட்டபதிலும் உடனே ஜம்புலிங்கம் சொல்லிய வார்த்தைகளும் மிக்க வேதனையாகவே இருந்தது.

எத்தனைதான் தைரியமும் துணிச்சலும் அசுர தைரியமும் உள்ள பிள்ளையாயிருப்பினும் 'ராஜாவுக்கும் கலக்கமும் பயமும் தலைதூக்கி ஆட்டத் தொடங்கியது. தன் தாயாரைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு அம்மா! நாம் வீட்டிற்குப் போய்விடலாம்மா! எனக்கு என்னமோ பயம்மாஇருக்கிறது. அந்தத்திருடன் ஒருவேளை இங்குக்கூட வந்து என்னையும் ஜம்புலிங்க மாமாவையும் சுட்டுக்கொன்று விடுவானோ? என்றபோது அவனிடம் சிறு குழந்தைத் தனத்தின் ரேகைபடிந்து பயத்தின் ஆதிக்கமே நிறைந்திருந்தது.

இதைக் கேட்ட ராஜாவின் தகப்பனுருக்கு முன்னிலும் அதிகரித்த கலக்கமும் ஏதோ ஒருவிதமான திகிலும் உண்டாகிவிட்டது. தைரியம் சொல்லி பையனைத் தேற்ற முடியாமல் விழித்தபடி டாக்டரை நோக்கி, ஸார் குழந்தை மிகவும் பயப்படுகிறான். தயவுசெய்து அவனை அனுப்பி விடுங்கள். நாங்கள் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்கிறோம் என்று கெஞ்சிக் கேட்டார்.

டாக்டர் இவ்விஷயத்தை ஜம்புலிங்கத்தினிடம் தெரிவித்தார். ஜம்புலிங்கத்திற்குப் பையனை அனுப்புவதற்கே மனமின்றித் தவிப்பதால் ஆஸ்பத்திரியைவிட்டு டாக்டரின்

தனி விடுதியில் அவனை வெகு ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளும்படியும் அவன் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே போன தகவலே யாருக்கும் தெரியாதபடி உஷாராகச் செய்ய வேணும் என்று எச்சரித்தார்.

அதோடு பையன்மீது அந்தத் திருட்டுப் பசங்கள் காரணமில்லாத க்ஷாத்திரம் வைத்திருப்பதால் பையனைத் தீர்த்து விடுவதற்கே எதிர்பார்த்து சூழ்ச்சி செய்துகொண்டிருப்பார்கள். ஆகையால் வெகு ரகஸியமாக அவனை உம்முடைய வீட்டிற்குக் கொண்டு போங்கள் என்று உத்திரவிட்டார்.

டாக்டரும் அதற்குச் சம்மதித்துப் பின் ராஜாவின் பெற்றோர்களிடம் வந்து விஷயங்களை ரகஸியமாகத் தெரிவித்து அம்மணி! தாங்கள் சற்றுங் கவலையோ! பயமோ படவே வேண்டாம். இந்தக் கேஸ் ஸ்பெஷல் போலீஸ் விஷயமாகையால் நான் என் வீட்டில் ரகஸியமாகப் பையனைக்கொண்டு வைத்துக்கொள்ளச் சம்மதித்தேன். பையனின் நன்மைகளையும், உங்களுடைய சந்தோஷத்தையும் உத்தேசித்து நான் இதைச் சொல்கிறேன். நான் உங்கள் மகனுக்குத் துணை இருக்கிறேன். நீங்கள் இருவரும் தயவுசெய்து வீட்டிற்குப் போய் வாருங்கள். ரூலுக்கு விரோதமாக எதுவும் செய்யக்கூடாதென்கிற சட்டத்தை நீங்கள் அறியாதவர்களல்லே. ஆகையால் ராஜாவை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் தைரியமாகப் போய் வாருங்கள் என்று கூறினர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜாவுக்கே அழுகை வந்துவிட்டது. இயற்கையின் சக்தியை-சிறுபையனின் பிறவிக்குணத்தை—ஜெயிக்க அவனல் முடியாமல் தன் தாயாரை ஒரு கையிலும் தகப்பனரை யொரு கையிலும் பிடித்துக்கொண்டு....டாக்டர்! ஹூம் நான் எங்கம்மா அப்பாவை விடவே மாட்டேன். அவர்கள் பக்கத்தில்தான் படுத்துக்கொள்வேன். நான் இங்கேயே இருக்கிறேன். இவர்களும் இங்கேயே இருக்கட்டும் என்று பிடிவாதம் த்வனிக்கும் குரலில் கூறினன்.

டாக்டர் பாடுதான் தர்மசங்கடமாகிவிட்டது. இந்தப் பையனை ப்ரத்யேகமாக நடத்துவதாலும் போலீஸ் விஷயமாகையாலும் ராஜாவின் பெற்றோர்களையும் தன் வீட்டிலிருக்க இசைந்தார்.

வெகுரகஸியமாக ராஜாவைத் தன்வீட்டிற்கு அனுப்பி விட்டார். ராஜாவும் சற்று நிம்மதியாகவே பயம் தெளிந்தவனாய் டாக்டர் வீட்டில் படுத்திருந்தான். ஆஸ்பத்ரியிலோ ஜம்புலிங்கத்திற்குத் தன்னைக் கட்டிப் போட்டிருப்பதுபோல் தோன்றியதே யன்றி இருக்கையே கொள்ளவில்லை; தான் பட்ட ச்ரமமெல்லாம் வீணாகிவிட்ட வயிற்றெரிச்சலும் ஆத்திரமும் அவருடைய நெஞ்சில் புயல்போல் நிர்த்தனம் செய்கிறது; இரவு நேரம் போகப் போக ஜம்புலிங்கத்தின் இதயத்தில்வேதனையும் எதிர்பாராத எண்ணங்களும் வாட்டி வதைக்கின்றதை அவரால் சமாளிக்கவே முடியவில்லை.

முட்டாள்கள் எப்படி ஏமார்ந்துப் போய் இந்தப் பாவிகளை விட்டிருக்கமுடியும்? இவர்களுக்குள்ளேயே ஏதாவது உளவு உள்ளக் கள்ளன் இருப்பானா! என்கிற புதிய யோசனை யொன்று உண்டாகிய அதிர்ச்சியில் காலின் வலியைக்கூட பார்க்காமல் எழுந்துபோய்விடலாமா என்கிற ஆவேசம் உண்டாகியது.

ஜம்புலிங்கத்தின் மனைவிக்கு தினமும் கணவனை எதிர்பார்த்துப் பார்த்து ஏமாறுவதும், பாதி ராத்திரிக்கு வருவதும், சில தினம் வரவும் ஓய்வில்லை என்று சொல்லியனுப்பி விடுவதும், திடீர் திடீர் என்று கேஸ் விஷயமாக வெளியூர்களுக்குப் போய்விட்டார் என்ற செய்தியைக் கேட்பதும், எதிரிகளால் தாக்குண்டு கிடக்கிறார் என்ற பயங்கரத்தைக் கேட்டு துடிப்பதும் பங்கஜத்திற்கு மிகுந்த பழக்கமாகிவிட்டதால் இன்றும் அவரை எதிர்பார்த்தபடியே உட்கார்ந்திருந்தாள், பாவம்!

அச்சமயம் டெலிபோன் வந்தது; அதாவது எஜமானருக்கு அடிபட்டு ஆஸ்பத்திரியிலிருப்பதாயும் பயப்படவேண்டாம், கவலை இன்றி இருக்கும்படி எஜமானர் தெரிவித்ததாக விஷயம் தெரிந்ததும் என்ன இருந்தாலும் பழக்கப்பட்ட விஷயமே இன்று அதிர்ச்சியாகத் தோன்றியது. ஏதனாலோ தான் போய் கட்டாயம் பார்க்க வேண்டும் என்கிற தடுக்க முடியாத ஆசை உண்டாகியது. தன் வீட்டுச் சேவகனையே துணைக்கழைத்துக்கொண்டு போகத் துணிந்தாள்.

அதைக்கண்ட சேவகன், அம்மணீ! வீட்டைப் பூட்டிக்கொண்டு நாம் போவது சரியில்லை. ஐயாவின் உயிருக்கே உலைவைக்கும் முறையில் விபரீதம் நடந்திருக்கிறது ; அத்

தகைய கிராதகர்கள் எப்போதும் சும்மா இருக்க மாட்டார்கள். ஐயாவுக்கு ஒன்றும் பயமில்லை என்பதை இப்போதுதான் அங்கிருந்து வரும் ஆள்மூலம் விசாரித்து வந்தேன் என்று வணக்கமாகக் கூறினான்.

பங்கஜத்திற்கு இதுவும் உசிதமாகவே பட்டதால் சற்றுத்தயங்கியவாறு நின்றாள். அச்சமயம் ஒரு கார் வந்து நின்றதும் இரண்டு கண்ணியமான மனிதர்களும் ஒரு சேவகனும் வந்து இறங்கினார்கள். அவர்கள் ஒருவரையும் பங்கஜத்திற்குத் தெரியாது. மரியாதையாக வரவேற்று விசாரித்தாள். நாங்கள் இன்ஸ்பெக்டர் ஐயாவைப் பார்க்க வந்தோம். எப்போது பார்க்கலாம்? என்றார்கள்.

சிலசமயங்களில் போலீஸ் விஷயமான எந்த விஷயத்தையும் சடக்கென்று வெளியில் சொல்லக்கூடாது என்கிற உத்திரவு ஜம்புலிங்கம் ஏற்கெனவே தெரிவித்திருப்பதால் சற்று யோசனை செய்து பின்....அவர் வெளியூருக்குச் சென்றிருக்கிறார். எப்போது வருவாரோ தெரியாது. அவரிடம் என்ன சொல்ல வேண்டுமோ அதை என்னிடம் தெரிவித்தால் நான் அவரிடம் சொல்கிறேன் என்று வினயமாகக் கூறினான்.

வந்தவர்:—அவரிடம் ஒரு சாமானை ஒப்படைக்க வேண்டும் அதற்காக வந்தோம். நாங்களும் அயலூருக்கு இன்றிரவே போக வேண்டுமாதலால் பெட்டியுடன் உங்களிடம் கொடுத்து விடுகிறோம். அதை அவரிடம் சேர்த்து விடுங்கள். இதோடு கடிதமும் இருக்கிறது; அவ்வளவுதான் விஷயம்! என்று கூறி ஒரு சிறிய பெட்டியைக் கொடுத்தார்கள்; பங்கஜம் அதை வாங்கி வைத்துக் கொண்டாள். வந்தவர்களும் மிக்க மரியாதையுடன் விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள்.

ஜம்புலிங்கத்தின் பீரோவில் அந்தப் பெட்டியை வைத்துவிட்ட பங்கஜத்திற்கு எப்படியாவது தன் கணவனைப் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டுமென்று தடுக்க முடியாத ஆவல் தூண்டியதால் சேவகனை வீட்டில் காவல் வைத்துவிட்டுத் தனக்கு முக்யமாய்வேண்டியவர் ஒருவரைத் துணைக்கு அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றாள்; இன்ஸ்பெக்டர் மனைவி என்கிறதால் ஆக்ஷேபணை இன்றி உள்ளே விட்டுவிட்டார்கள்; கணவனைப் பார்க்க வேண்டுமென்கிற தடுக்கமுடியாத ஆவல் எந்த ஒரு உத்தம பத்தினிக்கும் துடிப்பது இயல்பானதுதானே!

அதே துடிப்புடன் வந்த பங்கஜத்திற்குக் காலில் கட்டுடன் உடம்பில் மருந்து பூசியிருக்கும் நிலைமையில் படுத்திருக்கும் கணவனைப் பார்த்தவுடனே கண்ணீர் மளமளவென்று வந்துவிட்டது; இதே துப்பாக்கி ரவை மார்பில் பாய்ந்திருக்குமானல் என் கதி என்னவாயிருக்கும்! என்னப்பன் கருணமூர்த்தியின் அருளால் என் வாழ்வுக்குப் பங்கம் இன்றிக் காப்பாற்றினர் என்று தனக்குள் எண்ணி, பூரித்தவாறு ஆநந்தத்துடன் கணவனின் பக்கத்தில் போய் நின்றாள்.

இவள் எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமாய் ஜம்புலிங்கம் கடுங்கோபத்துடன் பங்கஜத்தை விரைக்கப் பார்த்து உன்னை யார் வரச் சொன்னர்கள்; என்னை எமன்கொண்டு போய்விட்டான் என்று பார்த்தாயா! எதற்குவந்தாய்? என்று பங்கஜம் சற்றும் எதிர்பாராத விதம் கேட்டதால் அவள் முதலில் சற்று நடுங்கிவிட்டாள். பிறகு சமாளித்துக் கொண்டு தாங்கள் வரச்சொல்லாமல் வந்ததற்கு மன்னிக்க வேண்டும்; என்மனம் கேட்கவில்லை; அதனல் வந்து ஒரு முறை பார்த்துவிட்டுப் போய்விடலாமென்றுதான் வந்தேன்; உங்களை யாரோ இரண்டு பெரிய மனிதர்கள் பார்க்கவந்தார்கள்; நீங்கள் ஏதோ ஸாமான்கள் கேட்டிருந்தீர்களாம் அதையும் இதோ கடிதத்தையும் கொடுத்துவிட்டுப் போனர்கள்! என்று முடிப்பதற்குள், கடிதமா!... நான் ஸாமான்கள் கேட்டேனு! இதென்ன விசித்திரம்? என்று பதறியவாறு கடிதத்தை வாங்கிப் படிக்கவாரம்பித்தார்.

நண்பருக்கு வணக்கம்; உலகமறிந்த உங்களை நானும் அறிவேன்; ஆனல் தினம் ஆயிரந் தலையைக் காணும் உமக்கு—தினம் நூறு தண்டனைகளை விதிக்கும் உமக்கு—நான் இன்னுரென்று சடக்கென தெரிந்துகொள்ள முடியாதாகையால் என்னை நானே விளம்பரப்படுத்திக் கொள்கிறேன். சுமார் 10 வருஷங்களுக்கு முன்பு முதல் முதல் உமக்குப் பெரும் புகழ்வாங்கிக் கொடுத்து உம்மைப் புகழேணியில் ஏற்றி ரிவார்டு பெறச் செய்ததோடு துப்பறிவதில் நீர் வல்லவர் என்ற பெயரையும் வாங்கிக்கொடுத்த அங்கமுத்து நான்தான் என்பதை மறுபடியும் தெரிவித்துக்கொண்டு விஷயத்தை எழுதுகிறேன்.

பத்து வருஷகாலம் நான் கொலைக் குற்றவாளி என்கிற கவசத்தோடு சிறையில் சரியானபடி செக்கு இழுத்தேன், கல்லுடைத்தேன், மாவறைத்தேன், கடினமான தொழில்களை எல்லாம் காவலுடன் கண்ணீர் வழியச்

செய்தேன்; துப்பறியும் வீர சிங்கமே! உண்மையில் நான் கொலைகாரனல்ல என்பதை நீர் அக்காலை அறியவில்லை. சூழ்நிலை — விதிவசம் — அப்படிச் சந்தேகிக்கும்படிச் செய்து விட்டது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன்.

நான் பக்கா நாஸ்திகனாக அப்போதிருந்தேன். அந்த நாஸ்திகத்தின் பலனே என்னை நாசம் செய்துவிட்டது என்பதை நான் பிறகு உணர்ந்தேன்; பிறகு என்றால் எப்போது என்று நினைக்கின்றீர்கள்; சிறைச்சாலையில் கம்பி எண்ணும் கைதிகளுடன் நானும் கம்பி எண்ணும்போது என்னைப்போல் நான்கு மடங்கு வயதான ஒரு ஆயுள் கைதியான கிழம் அங்கிருந்தது; அக்கிழம் கம்பிகளைக் கணக்கு வைத்து "8 கம்பிகளானால் அஷ்டாக்ஷரம்; அஷ்டாக்ஷரம் என்றால் ஸ்ரீமகாவிஷ்ணுவின் மதமும் தத்துவமும் ஆகும். 5 அக்ஷரங்களானால் பஞ்சாக்ஷரம்; பஞ்சாக்ஷரம் என்றால் சிவ மதத்தையும் சிவனையும் குறிக்கும்; பத்து கம்பிகள் எண்ணினால் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் தசாவதாரத்தைக் குறிக்கும்; 18 கம்பிகளை எண்ணினால் மகாபாரத யுத்தம் 18 நாள்; பகவத்கீதை 18 அத்யாயம் என்பது பொருள்; 64 கம்பிகளை எண்ணினால் நாலு வேதம், ஆறு சாஸ்திரம், 64 கலை ஞானம் என்பதாகும்; 63 எண்ணினால் அறுவத்துமூவர் திருநாளாகும். 108 எண்ணினால் காயத்திரி கணக்காகும்; ஆயிரம்தரம் எண்ணினால் பகவானின் ஸகஸ்திரநாமமாகும்" என்று சொல்லிவிட்டு கடகடவென்று ஸகஸ்ரநாமத்தைச் சொல்லுவார்.

முதலில் கிழவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. நான்தான் நாஸ்திகனாயிற்றே! பகவானைச் சொன்னால் எனக்கு எப்படிப் பிடிக்கும்? கிழவனைப் பயித்தியமென்று எண்ணி வெறுத்தேன். கிழவன் அதோடு விட்டானா? என்னைத் தவிர நாஸ்திகன் அங்கு வேறு யாருமே இல்லாததால் அவர்களிடம் திரும்பத் திரும்ப இதையே சொல்லுவான்.

கூடவிருக்கும் கம்பி எண்ணிகள் சும்மா இல்லாமல் அந்தக் கிழவன் சொல்வதை எல்லாம் திரும்பத் திரும்பக் கேட்பதோடு விளக்கிச் சொல்லச் செய்வார்கள். கிழவன் சலிக்காமல் மச்சாவதாரத்திலிருந்து கடைசீ வரையில் தினம் கொஞ்சங் கொஞ்சமாகக் கதை சொல்ல ஆரம்பித்தான்.

ஐயா! கட்டாயம் கருங்கல்லையும் இலவம் பஞ்சாக்கி விடலாம் என்கிற உண்மையை என் வாழ்நாளிலேயே

கிழவனின் மாதுர்யமான புராணக் கதைகளால் தெரிந்து கொண்டு விட்டேன். கல்லைக் காட்டிலும் கடினமாக இருந்த என்னுடைய நெஞ்சைக் கிழவன் இலவம்பஞ்சாகச் செய்துவிட்டான். என் கல்நெஞ்சின் நாஸ்திகத்தனத்தினுல்தான் என் நண்பன் கொலை செய்துவிட்டுத் திருடிக் கொண்டு வந்த நகைகளை அவனை ஏமாற்றி நான் அடித்து விட அவைகளை நான் திருடிக்கொண்டதன் பலன் கொலைகாரப் பாவி என்கிற பெயரைப் பெற்று விட்டேன்.

கிழவன் இரவு வேளைகளில் சொல்லும் கதைகளை முதலில கேட்காமல் காதைத்தான் பொத்திக்கொண்டேன் பிறகு எத்தனை நாளைக்கு எத்தனை நேரந்தான் அப்படிப் பொத்திக்கொள்ள முடியும். இடை இடையே கைவிட்ட சமயம் காதில்படும் விஷயத்தில் என்னையறியாது ருசி உண்டாகிவிட்டதால் பிறகு நானே நன்ருகக் கேட்க ஆரம்பித்து விட்டேன். அதிகம் வளர்த்துவானேன். கிழவன் ஒரு பாகவதராம். கதைகள், உபன்யாசங்கள் செய்துகொண்டு வந்தவராம். அவர் விதி ஒரு வீட்டில் உபன்யாஸங்கள் சொல்கையில் ஏதோ கொலையாம் எழ வாம் நடந்ததாம். என் விதிபோல் அவருக்கும் விதி யமைந்து தீவாந்திர தண்டனை விதித்து விட்டார்களாம். கொஞ்சம் வருஷம் கழித்து அவரை சாதாரண ஜெயிலுக்கு மாத்தி விட்டார்களாம். நல்ல உபன்யாஸமும நல்ல குணத்தையும் பார்த்து அவரை விடுதலை செய்து அனுப்பி விடவும் ஸர்க்கார் நினைத்ததை அறிந்த கிழவன் வெளி யுலகம் செல்ல இஷ்டமின்றி உடனே ஜெயிலதிகாரிகளைத் திட்டியோ அடித்தோ தண்டனையைத் தானே நீடித்துக் கொண்டு விட்டானும். அத்தகைய மகானுபாவனின் ஸத் ஸங்க ஸத்கதா காலக்ஷேபத்தினுல் நான் மறுஜென்மம் எடுத்தவனுகி விட்டேன். என் நல்ல குணம், நடத்தையைப் பார்த்து அதிகாரிகளும் எனக்கு நெரய ரெமிஷன் கொடுத்து விடுதலை செய்துவிட்டார்கள். நான் வெளியே வந்ததும் என்னினத்துடன் சேரவில்லை. காசி புண்ய க்ஷேத்ரத்தில் ஒருவருஷம் தங்கி நல்ல புனித கங்கை நீராடி சத்திரா போஜனு! மடாங்த்ரா என்ற முறையில் காலத் தைக் கடத்தினேன்.

ஸ்ரீகோதா ஹ்ருதயம்

அல்லது ஸ்ரீக்ருஷ்ண ப்ரேமா

வை. மு. கோ. 9-வது வெளியீடு.

விரைவில் வெளிவரும். தூய்ய மலர்மாலையுடன்

அணு 12.

183193

FOREWORD

The "Jayanthi Chintanaigal" or the "Birthday Reflections" which is brought out by Mr. V. M. Srinivasan is a unique work in many ways. He has written four articles about Sri Krishna, Sri Rama, Lord Srinivasa and Sri Mahalakshmi, names held in veneration in every Hindu household, in particular of the Vaishnavites. These articles are interesting, informative and instructive. Himself being a lawyer, he has not failed to quote precedents and authorities by way of references to the great saints and the Alwars, and the impressions and extracts from other texts depicting the greatness and achievements of the Immortals. The author's vast knowledge of Vaishnavite literature and his spirit of devotion have manifested themselves in the work. The illustration given at the end of each chapter is bound to appeal to the reader, especially to the layman, who can have a pictorial rendering of the life, achievements and teachings of the Incarnations of Sri Maha Vishnu.

Well conceived, couched in simple and chaste Tamil, supported by the great sayings of the saints and made attractive by instructive illustrations, this book will be found valuable to every devotee enabling him to have a knowledge of the greatness of the Vaishnavite cult, its philosophy and message. Coming as he does from a highly religious and pious family himself and being a true devotee, the author has, by bringing out this publication, added to the already good services he has been rendering to the cause of Hindu religion.

"Venkata Baugh," (The Hon'ble Mr Justice)
Madras-2. W. S. KRISHNASWAMI NAYUDU
25th July 1955.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI NAYAKIAMMAL is printed & published by V. M. PARTHA SARATHY at the JaganMohini Press, 26, Car St., Triplicane, Madras 5.

Jaganmohini (August 1955) Regd. No. M. 2210.

வெளியாகிவிட்டது

ஜயந்தி சிந்தனைகள்

★

ஒப்பிலா நாட்கள் நான்கு

★

ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தி
ஸ்ரீ ராம ஜயந்தி
ஸ்ரீ நிவாஸ ஜயந்தி
ஸ்ரீ தேவி ஜயந்தி

★

வை. மு. ஸ்ரீநிவாஸன், M. A., B. L.,
(அட்வகேட்)
அவர்களின் 8-வது வெளியீடு.

(48 படங்களுடன்)

★

கனம் நீதிபதி W. S. கிருஷ்ணஸ்வாமி நாயுடு
அவர்களுடைய முன்னுரையுடன்

★

ஜகன்மோகினி காரியாலயம்,
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

1955

ரூ. 1-8.